# இந்திய ஜனதிபதி காலமானர்

பக்கங்கள் 8 விலை சதம் 30 ★★

ஈழநாடு

The EELANADU

மலர்: 19 தை 30 ஸபர் 22 இதழ்: 2
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-2-77

## ஜட்டி பதில் ஜனதிபதி

இந்திய ஜனதிபதி ஜனப் பக்ருதீன் அலிஅகமத் நேற்றுக் காலை புதுடில்லியில் மாரடைப்பினுல் காலமானர். இதையடுத்து உபஜனதிபதி திரு. பி. டி. ஜட்டி பதில் ஜனதிபதியாக சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# ஜி. ஜி. யின் பூதவுடல் நாளை பருத்தித்துறையில் தகனம்!

## இன்று காலை பலாலியிலிருந்து யாழ்.நகருக்கு இறுதியாத்திரை

### கடையடைப்பு; படக்காட்சி இல்லை

மறைந்த தமிழர் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் பூதவுடல் விசேட விமானத்தில் இன்று சனிக்கிழமை காலை சுமார் 9 மணியளவில் பலாலி விமான நிலையத்தை வந்தடையும்.

இங்கிருந்து சகல மரியாதைகளுடனும் பலாலிவீதி வழியாக பூதவுடல் யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள தமிழர்கூட்டணிக் காரியாலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து நண்பகல் வீரசிங்கம் மண்டபத்துக்கு கொண்டுசெல்லப்படும். இங்கு மக்களின் அஞ்சலி இடம்பெறும்.

தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னுல் காலை ஏழு மணிக்கு சமயச்சடங்குகள் நிகழும். இதன்பின்னர் தகனக் கிரியைக்காக தலைவரின் பூதவுடல் பருத்தித்துறை வீதி வழியாக நெல்லியடி ஊடாக பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்படும். பருத்தித்துறை சென்றடைந்ததும் அங்கிருந்து நடைபவனியாக இறுதிஊர்வலம் கடற்கரை வீதிவழியாக குடும்ப மயானத்தை சென்றடையும். குடும்பமயானத்தில் தலைவர் திரு. ஜி. ஜியின் பூதவுடல் தகனம்செய்யப்படும்.

## இன்று துக்க தினம்

அமரர் திரு. ஜி. ஜி.யின் பூதவுடல் இன்று யாழ்ப்பாணத்திற்கு வருவதையொட்டி யாழ். மாவட்டம் முழுவதிலும் துக்கதினம் அனுஷ்டிப்பதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வேண்டு கோள் விடுத்தனர். இதனையொட்டி இன்று சகல வர்த்தக ஸ்தாபனங்களும் கடையடைப்புச் செய்வதற்கு முடிவுசெய்துள்ளன. இத்துடன் சினிமாப்படக் காட்சிகளும் இன்று இருக்கமாட்டா.

### விசேஷ பஸ் ஒழுங்குகள்

இறுதி யாத்திரையில் கலந்து கொள்ளும்பொருட்டு வட பகுதியில் திரளவிருக்கும் மக்களின் வசதியை முன்னிட்டு இ. போ. ச. தலைவர் திரு. ஜே. வி. ரி. கொத்தலாவலை 8 பஸ்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். இந்த பஸ்களை இன்றுகாலை பல்வேறு பாதைகளில் சேவையில் ஈடு

படுத்த இ. போ. ச. கோண்டாவில் டிப்போ நடவடிக்கை

(4-ம் பக்கம் பார்க்க)

### தி.மு.க. அமைச்சர்கள் அனுதாபம்

கொழும்பு, வெள்ளி

திரு. மு. கருணாநிதி உட்பட தி. மு. க. முன்னுள் அமைச்சர் பலரும் ஜி. ஜி. யின் மறைவுக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பியுள்ளனர்.

லண்டன் தமிழ்ச் சங்கம், மற்றும் மலேசிய, இந்திய பொது ஸ்தாபனங்களும் அனுதாபச் செதிகளை அனுப்பி வைத்துள்ளன. (ஆ)

## ஜி. ஜி.க்கு பிரதமர் நேரில் அஞ்சலி!

(கொழும்பு)

அமரர் திரு. ஜி.ஜி. பொன்னம்பலத்தின் பூதவுடலுக்கு பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் கொழும்பில் உள்ள அன்னரது இல்லத்திற்குச் சென்ற பிரதமமந்திரி அமரரின் பூதவுடலுக்கு இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இதையடுத்து பிரதமர் அமரரின் குடும்பத்தாருக்கு தமது

(4ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள் உட்பட தலைவர்கள் சுமந்தனர்

நமது நிருபர் 'யோகி'

கட்டுநாயக்கா, வெள்ளி

கோலாலம்பூரிலிருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை பூதவுடல் பண்டாரநாயகா சர்வதேசவிமானநிலையம் வந்ததும் ஜி. ஜி.யின் மகளான விஜி கதறியபடி முதலில் வர அவரைத் தொடர்ந்து திருமதி பொன்னம்பலம் சில்லுவண்டி கதிரையில் வரவேற்பு மண்டபத்திற்கு வந்தார். திரு. குமாரும் மற்றும் உறவினர்களும் பின் தொடர்ந்தனர்.

### தடுத்தும் உள்ளே சென்றனர்

அங்கு திரண்டிருந்த மக்கள் உள்ளே செல்ல துடிதுடித்துக் கொண்டிருந்தபோது திரு. எம். சிவசிதம்பரம் அவர்களைப் பொறுமையாக இருக்கச் சொன்னர். ஆனாலும் அவர்கள் பொலிஸ் தடையையும் மீறி உள்ளே சென்று வரவேற்பு மண்டபத்திற்குள்ளும் சென்று திருமதி பொன்னம்பலத்திற்கும் குடும்பத்தினருக்கும் ஆறுதல் சொன்னர்கள்.

இதைத்தொடர்ந்து தமிழர் கூட்டணித் தலைவர்களும் சென்று ஆறுதல் சொன்னர்கள். வெள்ளி அதிகாலை 2-30க்கு ஜி. ஜி. யின் பூதவுடலைத் தாங்கியபழையைக்கொண்ட மோட்டார் ரதம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

பொலிஸ் ரேடியோ கார் முன்செல்ல அதன்பின் பூத

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்திய பிரதமருக்கு எஸ். ஜே. வி. அனுதாபம்

கொழும்பு, வெள்ளி

இந்திய ஜனதிபதி பக்ருதீன் அலி அகமதுவின் மறைவையொட்டி மூதறிஞர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்திக்கு அனுதாபச்செய்தியொன்றை தந்தியில் அனுப்பியுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆழ்ந்த அனுதாபத்தை இந்திய அரசுக்கும் நாட்டு மக்களுக்கும் தெரிவிப்பதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

## திருமண நன்றி நவிலல்

குலராஜாதேவா -- மல்லிகாதேவி

31-1-77 திங்கட்கிழமை காலை நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு நேரில் சமுகம் தந்தும், பின்னர் மணமகள் இல்லத்தில் நடைபெற்ற விருந்துபசாரத்திலும், அன்று பிற்பகல் மணமகன் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்புபசாரத்திலும் கலந்தும், வாழ்த்துச் செய்திகள், பரிசில்கள் அனுப்பியும் எம்மை மகிழ்வித்த உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது சார்பிலும் பெற்ருேர், சகோதரர் சார்பிலும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

5456

## அஞ்சலி

மாபெரும் தமிழர் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவால் துயருற்றிருக்கும் மக்களுடன் நாமும் சேர்ந்து எமது துக்கத்தை பகிர்ந்துகொள்கிருேம்.

ரைகர் ட்ரேடிங் கம்பனி,

புன்னலைக்கட்டுவன் தெற்குச் சந்தி, புன்னலைக்கட்டுவன்.

உரிமையாளர் : வீ. சண்முகேஸ்வரன் 5459

# நுண்கலைப் பிரிவு
## கோப்பாய்க்கு மாற்றம்

மாவிட்டபுரம், வெள்ளி பலாலி ஆசிரிய பயிற்சிக்கலா சாலையில் இயங்கிவந்த நுண் கலைப் பிரிவு கடந்த மாதம் 24-ம் திகதியுடன் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

சங்கீதம், நடனம், சித்திரம் ஆகிய நுண்கலைப் பகுதிகளைக் கொண்ட இந்த நுண் கலைப்பிரிபு பலாலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையி லிருந்து இவ்வாண்டுடன் கோப் பாய் ஆசிரிய கலாசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் இவ்வாண்டு இப்பயிற்சிநெறிக் குத்தெரிவான 30 பேரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை யிலேயே பயிற்சிபெறுவார் கள்.

பலாலி ஆசிரிய கலாசாலை யில் சங்கீத விரிவுரையாளராக இருந்த திரு. பொன். தெய் வேந்திரம், சித்திர விரிவுரை யாளராக இருந்த திரு. வீரசிங் கம், நடன விரிவுரையாளராக இருந்த திரு. வீரமணி ஐயர் ஆகியோரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ள னர்.

# வரி அதிகரிப்புக்கு வர்த்தகர் சங்கம் ஆட்சேபம்

பண்டத்தரிப்பு, வெள்ளி பண்டத்தரிப்பு பட்டண சபையினரின் உத்தேசவரி அதி கரிப்பு நடவடிக்கைகளுக்கு பண்டத்தரிப்பு வர்த்தகர் சங் கமும் பலத்த ஆட்சேபமும் தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான தீர்மா னம் ஒன்று பண்டத்தரிப்பு வர்த்தகர் சங்கத்தின் முதலா வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் ஏகமானதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சங்கத்தலைவர் திரு. மு. நட ராஜா தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட இதர முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு:-

'பண்டத்தரிப்பு பிரதான வீதிக்கு அண்மையில் கட்டப் பட்டுள்ள சாக்கடை வடிகால் அடிக்கடி இடிந்து விழுவதினால் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கிநின்று நுளம்புகள் உற் பத்தியாக வழிவகுப்பதினு லும், துர்நாற்றம் வீசுவதினு லும் இதனை விரைவில் சீர் திருத்தி தண்ணீர் வழிந்தோடு மாறு மாற்றியமைக்கவேண் டும் என்று பட்டணசபை அதிகாரிகளை வேண்டுதல்.

'இரவுவேளைகளில் பாதுகாப் புக் கருதி பஜார் வீதியில் பொலிசார் அடிக்கடிரோந்து சுற்ற ஒழுங்குசெய்ய தரு மாறு சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியை வேண்டுதல்.

புதுவருட நிர்வாகிகள் தெரி வின்போது பின்வருவோர் ஏக மனதாக தெரிவுசெய்யப்பட் டனர்.

தலைவர் திரு.மு. நடராஜா, செயலாளர் திரு. ப. ஜேம்ஸ், தனதிகாரி திரு. க. மயில்வாக னம். 12 பேர்கொண்ட நிர் வாகசபையும் தெரிவுசெய்யப் பட்டுள்ளது. (இ)

# கந்தபுராணம் துன்பம்போக்கும்
## — செல்விதங்கம்மா

மாவிட்டபுரம், வெள்ளி

''கந்தபுராணத்தைப் படிக்க வைத்து, அதில் வரும் சிறப்பு நிகழ்ச்சிகளை பெருவிழாக்க ளாகக் கொண்டாடி தமது துன்பங்கள் நீங்கப்பெற்ற அடியார்களது வரலாறுகளைப் படிக்கும் போது நமக்கு கந்த புராணத்தின் மகிமை தெரிகி றது. இக்கந்தபுராணத்தை பேணிப்பாதுகாத்து, அதன் சிறப்பை மக்களிடையே தெரியப்படுத்தி மக்களை அதில் கூறப்படும் நல்ல வழியில் இட்டுச் செல்வதால் சிறந்த தோர் சமுதாயம் மிளிரமுடி யும்.'

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் கந்தபுராண உரையாசிரியர் பிரமஸ்ரீ. வ. குகசர்மாவுக்கு நடத்தப்பட்ட பாராட்டுவிழா வில் உரையாற்றிய சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப் பாக்குட்டி கூறினர்.

மேற்படி ஆலயத்தில் கந்த புராண தொடர்விரிவுரை யாற்றி பூர்த்திசெய்ததை முன் னிட்டு நடத்தப்பட்ட இப் பாராட்டுவிழாவில் செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசுகையில், கந்த புராணத்தைப் படித்து அதி லுள்ள முருக நாமங்களை தோத்தரித்தால் நம்மை துன் பங்கள் அணுகாதென்றும். முருகனது பெருமைகளை எடுத் துக் கூறுவோரும், அவற்றைக் கேட்போரும், முருகனது நாமங்களை சிந்தனைசெய்வோ ரும் போற்றுதற்குரியவர்க ளென்றும் கூறினர்.

மற்றும் சங்கீத பூஷணம். திரு.சி.விநாசித்தம்பி, திருமதி. சிவபாக்கியம்பாலநாதன், திரு. நம. சிவப்பிரகாசம் ஆகியோ ரும் பாராட்டுரை வழங்கி னர்.

பிரமஸ்ரீ. வ. குகசர்மாவுக்கு பொன்னாடைபோர்த்தி பொற் கிழி வழங்கிக் கௌரவிக்கப் பட்டது.


## வரி விளம்பரம்

### தேவை

சாம்பிராணி குச்சிகள் உருட்டுவதற்கு பெண்கள் தேவை. தகுதியுடையோர் நேரில் வரவும். ராஜன் இன் டஸ்ரீஸ், கனகசபைரோட், மானிப்பாய். 5449

அப்பளம், வடகம், நீலம், சாந்துப்பொட்டு, சவர்க்காரம் குங்குமம்,அச்சாறு,பேபிசெட், கற்பூரம் தயாரிப்பதில் அனுப வமும் ஆற்றலுமுடைய ஆண் களும்,பெண்களும் 28-2-77க் குள் கிராமசேவையாளரின் நற்சாட்சிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். றுப்பி, 18, வேம்படி வீதி, யாழ்ப் பாணம். 5451

### பயிற்சி

வெளிநாடுகள் செல்ல ஏற்ற பயிற்சிகள். வெல்டிங், இலெக் றிக் வயறிங், ரேடியோ குறைந்த செலவில் குறுகிய காலத்தில் என்ஜினியர்மாரால் நடாத்தப்படும். தொழில்புரி வோருக்கு மாலைநேர வகுப்பு கள். National Institute of Engineering Technologyமைற் மண்டபம், 128, பருத்தித் துறை வீதி, யாழ்ப்பாணம். 5452

ஆனைப்பந்தியடி உயர்தரக் கல்லூரியில் யாழ். இளைஞர் கழகத்தால் ஞாயிற்றுக்கிழமை களில் நடத்தப்படுகின்ற பாலர் பாடசாலை ஆசிரியை பயிற்சி டிப்பிளோமா வகுப் பில் சேர விரும்பும் G. C. E. இருதடவைகளில் தமிழ், கணி தம் உட்பட ஆறு பாடங்கள் சித்தியடைந்த மாணவிகள் இம்மாதத்தில் வருகின்ற ஞாயிற்றுக்கிழமைகளில் நேரில் வரவும். 5454

மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா வகுப்புக்கள் 14-2-77ல் ஆரம்பமாகவுள் ளன. பயில விரும்புவோர் 14-ந் திகதி நேரில் வரவும். இன்ஸ்ரிரியூட் ஒவ் எஞ்ஜினி யரிங் ரெக்னோலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லிரோட், யாழ்ப் பாணம். 5448

### கல்வி

பட்டதாரி ஆசிரியர்கள் வீடு கள் சென்று ஆங்கில இலக்க ணம், இலக்கியம், பொது அறிவு, ஆங்கிலப் பேச்சு (Spoken English) கற்றுக் கொடுப்பார்கள்.பெண்களுக்கு மட்டும் மத்திய ஸ்தலத்தில் இலவச ஆங்கிலக் கல்வி கற் றுக் கொடுக்கப்படும். விண் ணப்பிக்கவும். விளம்பர இல: 5379, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 5379

### வகுப்புகள்

ஹோமியோபதிடாக்டர்கள் பதிவு பெற சகல பாடங் களிலும் பயிற்சியளிக்க சனி, ஞாயிறு முழு நேர வகுப்புக் கள் யாழ். ஹோமியோ வைத் தியசாலையில் ஆரம்பமாகி றது. விபரங்களுக்கு: டாக் டர் தி. பரமசிவம் டி. எம். எஸ். யாழ்ப்பாண வீதி, வல் வெட்டித்துறை. 5445

### ஏலவிற்பனை

தெகிவலை, காலி ரோட் 77-ம் நம்பர் கடையில் அ. ராஜரத்தினம் அவர்களி டம் 1-7-70 முதல் 31-12-74 வரை அடவு வைத்து மீட்கப் படாத நகைகள் யாவும் 1977-ம் ஆ மார்ச் மாதம் 2-ந் திகதி காலை 9 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற் கப்படும்.

என். எம். ஏ. லீ.
அப்துல்ஹமீது அன்சன்
5446 ஏலதாரர்.

FOR SALE

"Prince Star" Hi-Fi Sterio system 3 in 1 CassetDeke (out put 80watts)for immediate sale Just arrrived Contact 76, Arasady Road, Jaffna
5457

# பகிரங்க ஏலவிற்பனை
## கிராமாட்சி மன்றம் தெல்லிப்பழை

பொருள்:- பாவித்த மின் செப்புக்கம்பி நிறை 800 இருத்தல். (No. 2 & No. 4 copper)

இடம்:- கிராமாட்சி மன்ற அலுவலகம், தெல் லிப்பழை.

காலம்:- 26-2-1977 காலை 10-00 மணி.

குறிப்பு:- கூடிய கேள்விக் காரர் கேள்வித் தொகையின் மூன் றிலொரு பங்கு பணத்தை உட னடியாகக் கட்ட வேண்டும். மிகுதிப் பணத்தை 1-3-77ல் செலுத் திப் பொருளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தவ றின் செலுத்திய பணம் திருப்பிக் கொடுபடமாட் டாது.

ஒப்பம்
வை. சிதம்பரநாதன்,
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
தெல்லிப்பழை.

கிராமாட்சி மன்றப் பணிமனை,
தெல்லிப்பழை,
2-2-1977. 5455


# யாழ். லயன் களியாட்டு விழா-77

1977-ம் ஆண்டு பங்குனி மாதம் 9-ம் திகதி பி ற் பகல் 4 மணிக்கு முன்னர் பிரவேசக் கூப்பன்களை இணைச் செயலாளர் திரு. இ. ஆர். ஜோசேப், 484, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

## கீழ்க்காணும் பிரவேசக் கூப்பன்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களே ஏற்றுக் கொள்ளப்படும்.

1977-ம் ஆண்டு பங்குனிமாதம் 19-20-ம் திகதிக ளில் நடைபெறும் யாழ். லயன் கழக முதலாவது களியாட்டுவிழா போட்டிகளில் கீழ்க்குறிப்பிடும் விளை யாட்டுப் போட்டிக்கு என்னையும் ஒரு போட்டியாளரா கப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

போட்டியில் பங்கு பற்றித் தகுதியுடையேன் என் பதை உறுதிப்படுத்தி போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் எனக்கு அல்லது எனது சொத்துக்கு ஏற்படும் காயம் அல்லது சேதத்துக்கு நானே முழுப் பொறுப் பாளி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு ஏற்படும் அவ்வாறான காயம் அல்லது சேதத்திற்கு விழா நிர்வாகிகள் அவர்களின் பிரதிநிதிகள் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிகள் எவரும் பொறுப்பாளி களாகமாட்டார்கள் என்றும் அவர்களிடமிருந்து எந்த நஷ்டஈடும் கோரமாட்டேன் என்பதையும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

போட்டி நிகழ்ச்சிகள் சம்பந்தப்பட்ட சகல விதி களுக்கும் கட்டுப்பட்டு நடப்பேன் என்பதையும் உறு திப்படுத்துகிறேன். போட்டியில் நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியே கூப்பன் களை போட்டியாளர்கள் அனுப்பவேண்டும்.

## போட்டி நிகழ்ச்சிகள்

[1] வர்த்தக ஊர்திகள் பவனி, [2] கைத்தொழில் ஊர்திகள் பவனி, [3] விவசாயஊர்திகள் பவனி, [4] பழைய மோட்டார் வாகன பவனி, [5] அலங்கார பவ னியில் விநோதஉடை தரித்தோர் காட்சிகள், [6] மாண வர் அணிவகுப்பும் 'பாண்ட்' வாத்தியப் போட்டியும், [7] 12 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் விநோத உடைப்போட்டி, [8] 90 மைல் மரதன் சயிக்கிள் ஓட் டம் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரை [9] 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு 25 மைல் சைக் கிள் ஓட்டம், [10] 5 மைல் யுவதிகள் சைக்கிள் ஓட்டம், [11] 26 மைல் மரதன் வீதியோட்டம், [12] நீச்சல் போட்டி, [13] படகோட்டப்போட்டி, [14] கராட்டிப் போட்டி, [15] யாழ். ஆணழகன்போட்டி, [16] யாழ். அழகுராணிப்போட்டி, [17] மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி.

இந்த பதினேழு போட்டிகளிலும் கலந்துகொள் ளும்விண்ணப்பதாரர் அனைவரும் வடமாகாணத்தில் வசிப் பவர்களாக இருக்கவேண்டும். 18வது போட்டிக்காக இடம்பெறவுள்ள வாணவேடிக்கைப் போட்டியில் அகில இலங்கை ரீதியாகப் பங்குபற்றலாம்.

நிகழ்ச்சி ..............................
(பெரிய எழுத்துக்களில்)

பெயர்: ..............................

விலாசம்: ..............................

வயது: ..................

விளையாட்டுப்போட்டி நிபந்தனைகளுக்கு சம்மதித் துப் போட்டி நீதிபதிகளின் முடிவை ஏற்றுக்கொள்வேன்.

..............................
போட்டியாளரின் கையொப்பம்

போட்டியாளர் 21 வயதுக்குட்பட்டவராக இருப் பின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உறுதிப்படுத்த வேண்டும்.

போட்டி நிபந்தனைகளையும், விதிகளையும் நான் மேற் கண்ட போட்டியாளருக்கு விளக்கிக் கூறியுள்ளேன். அவர் பங்கு பற்றுவதில் எனக்கு ஆட்சேபமில்லை.

### பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஒப்பம்

..............................

கலை நிகழ்ச்சிகளாக (1) நாதஸ்வரம், (2) பரத நாட்டியம், (3) மெல்லிசை, (4) வில்லுப்பாட்டு, (5) குட்டி நாடகங்கள், (6) யோகாசனம், (7) பொப் இசை, (8) லிம்போ நடனம், (9) பெல்லி நடனம். (10) மாயா ஜாலக் காட்சி, (11 மெய்வல்லுநர் காட்சி (இலங்கையின் பல மெய்வல்லுநர் பங்குபற்றுவது).

மேற்படி நிகழ்ச்சிகளில் பங்குபற்ற விரும்பும் எந் தத் தனி நபரோ அல்லது பாடசாலையோ, கழகங்களோ விண்ணப்பங்களை இவ்வருடம் பங்குனி மாதம் 9ந் திக திக்கு முன் அமைப்புச் செயலாளர், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

# மாநிலசுயாட்சியை மீண்டும் தி. மு. க. வலியுறுத்துகிறது!

## மரீனக் கூட்டத்தில் கருணநிதி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம்

### "ஜனநாயகத்தைக் காத்து மக்கள் பணி செய்வதே கழகத்தின் நோக்கம்"

சென்னை, பெப். 11

"ஜனநாயகத்தைக் கட்டிக்காத்து மக்களுக்குப் பாடுபடுவதனையே எமது கழகம் கடமையாகக் கொண்டுள்ளது" என்று திராவிடமுன்னேற்றக்கழகம் வெளியிட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளது.

சென்னை மரீனு கடற்கரை சீரணி அரங்கில் நடைபெற்ற தி.மு.க.வின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தைத் துவக்கி வைத்து, தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணநிதி தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டதுடன், தேர்தலில் போட்டியிடவிருக்கும் முதல் வேட்பாளர் பட்டியலையும் வெளியிட்டார். 24 வேட்பாளர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தி. மு. க. தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

**மாநில சுயாட்சிக் கோரிக்கை மீண்டும் வலியுறுத்து**

'கழகம் மாநில சுயாட்சியை மீண்டும் வலியுறுத்தும் அதே வேளையில் இதில்பிரிவினைக்கோ தேசவிரோத நடவடிக்கைக்கோ எள்ளளவும் இடமில்லை என்பதை வலியுறுத்திக்கூற விரும்புகிறது. சமுதாய ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்படவேண்டும். அரசியலமைப்புத் தொடர்பான 42-வது ஷரத்தின் திருத்தத்தில் மாற்றம் கொண்டுவரப்படவேண்டும் என்பதும்கழகத்தின் குறிக்கோளாகும். அவசரகாலவிதிகள் உடன் நீக்கப்படவேண்டும்'

**மூன்று முன்னள் அமைச்சர்களும் போட்டி**

கழகத்தின் வேட்பாளர்களாக திருவாளர்கள்: ராஜாராம், முத்துசாமி, ராஜாங்கம் ஆகியதமிழ்நாடுமாநில அமைச்சர்கள் போட்டியிடுகிருர்கள்.

**ஆசைத்தம்பி முரசொலிமாறன்**

வடசென்னையில் கழக வேட்பாளராக கழகத்தலைவர்களில் ஒருவரும், பிரபல திரைப்பட வசனகர்த்தாவுமான திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி போட்டியிடுகிருர்.

மத்திய சென்னையில் கருணநிதியின் மருமகனுன முரசொலி மாறன் போட்டியிடுகிருர்.

கழக வேட்பாளர்களின் அடுத்த பட்டியல் அடுத்த இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று திரு. கருணநிதி தெரிவித்தார்.

**ஆளும் காங்கிரஸ்- அ. அ. தி. மு. க- கம்யூனிஸ்ட் உடன்பாடு**

இதேநேரம், தமிழ்நாட்டில் ஆளும் காங்கிரஸ்கட்சி, திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையிலான அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகம்,இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய கட்சிகளுக்கிடையே தேர்தல் உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இத்தகவலை இந்திய காங்கிரஸ் கட்சி செயலாளர் திரு.பி. வி. ராசு நேற்று புதுடில்லியில் வெளியிட்டார். தொகுதிகள் எண்ணிக்கை பற்றி இன்று முடிவுசெய்யப்படும் என்றும் சொன்னர்.

**பி. ராமச்சந்திரன் மத்தியசென்னையில் போட்டி**

தமிழ்நாட்டில் ஜனதா கட்சியின்சார்பில் போட்டியிடவிருக்கும் 11 வேட்பாளர்களின் பட்டியலை ஜனதா கட்சியின்தமிழ் நாட்டுப்பிரிவுத் தலைவர் திரு. பி. ராமச்சந்திரன் வெளியிட்டார்.

ஸ்தாபனகாங்கிரஸ் தலைவருமான திரு.பி. ராமச்சந்திரன் ஜனதாகட்சி வேட்பாளராக மத்தியசென்னையில் போட்டியிடவிருக்கிருர்.

**முருகானந்தம் கட்சியிலிருந்து நீக்கம்**

லோக்சபாவின் முன்னள் உறுப்பினரான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைசேர்ந்த திரு. எஸ். ஏ. முருகானந்தம் அக்கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின்பேரிலேயே இவர்மீது இந்தஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இம் மாதம் 5-ம் திகதியில் இருந்து இவர் கட்சியில்இருந்து தற்காலிகமாக விலக்கிவைக்கப்பட்டிருந்தார். (உ)

# ஒற்றையாட்சியா; ஜனநாயகமா?

புதுடில்லி, பெப்.11

'எதிர்வரும் மார்ச்மாதத்தில் நடைபெறவிருக்கும் லோக்சபா தேர்தல் இந்நாட்டில் ஜனநாயக ஆட்சி மலரவேண்டுமா? அல்லது ஒற்றையாட்சிதான் இருக்கவேண்டுமா?என்பதனைத் தீர்மானிக்கப்போகும் வாக்களிப்பாகும்' என்று ஜனதா கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியுள்ளது.

'இவ்விஞ்ஞாபனத்தில் 'மாநிலங்களின் சுயாட்சிக்கு ஜனதா கட்சி ஆதரவளிக்கும்' என்று உறுதிகூறப்பட்டுள்ளதுபொருளாதாரமும் அரசியலதிகாரமும் பரவலாக்கப்படவேண்டுமென்றும் ஜனதா கட்சியின் தேர்தல்விஞ்ஞாபனம் கூறுகிறது.'

இதேவேளை, தமிழ் நாடு, பாண்டிச்சேரியில் ஜனதா கட்சிக்கும், தி.மு.க.வுக்குமிடையில் தேர்தல் உடன்பாடு பற்றியபேச்சுவார்த்தைகள்தோல்வியில்முடிந்தன என்பது தெரிந்ததே. (உ)

# அரசியல் கைதிகள் விடுதலை; ஊழலுக்கு முற்றுப் புள்ளி:

## ஜனதா கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம்

புதுடில்லி, பெப். 11

சோசலிஸ்ட்கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் உட்பட 4 அரசியல்கட்சிகள் சேர்ந்து உருவாக்கப்பட்ட ஜனதா கட்சி தனது தேர்தல்விஞ்ஞாபனத்தை இன்று வெளியிட்டது.

புதுடில்லியில் வெளியான ஜனதா கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ள விபரங்களின் சுருக்கம் வருமாறு:

● சோஸலிச, ஜனநாயக கோட்பாடுகளுக்காக உழைத்தல். - 1975 யூன் மாதத்தில் பிரதமர் இந்திராகாந்தியினுல் அரசியல்அமைப்பில் கொண்டுவரப்பட்ட பிரதான சட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துதல்.

● செய்தித் தணிக்கை முறையை ரத்துச்செய்தல்- பத்திரிகைகளை சுயமாக இயங்குவதற்கு அனுமதித்தல்.

● சட்டவிரோத செயல்களில் ஈடுபடுமாறு அரச ஊழியர்களை வற்புறுத்துவதிலிருந்து தவிர்த்தல்.

● குடும்பக்கட்டுப்பாட்டின் அவசரதேவைகளை ஒப்புக்கொள்கிருேம். அதே வேளையில் கட்டாயத் தடை விதிப்பில் நம்பிக்கையில்லை.

● மண்டலசார்பற்ற கொள்கைகளை ஆதரித்தல்- வெளியுறவுகளில் நாட்டு மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்புக்கொடுத்தல்.

● பொதுவாழ்வின் எதிரிகளான ஊழலுக்கு முற்றுப்புள்ளி- சகல அரசியல்கைதிகளும் விடுதலை- அரசியல் கட்சிகளுக்கு விதிக்கப்படும் தடைகளை நீக்குதல். (ஆ)

# இந்திய தேர்தல் அரங்கு

## சட்டம் தளர்த்தப்பட்டதால் கட்டுப்பாடு சீர்குலைந்துள்ளதாம்

இந்தியாவில் அவசரகாலச் சட்டவிதிகள் தளர்த்தப்பட்டதால் கட்டுப்பாடு சீர்குலைந்துள்ளதாகவும், உணவுப் பண்டங்களின் விலை அதிகரித்துள்ளதாகவும் பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் உள்ள தமது வாசஸ்தலத்தின் முன்கூடிய பல்கலைக் கழக ஆசிரியர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் முன்னிலையில் உரையாற்றுகையில்கூறியுள்ளார். ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கவேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடமையாகும் என்றும் திருமதி இந்திரா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

0 0 0

## ஆட்சி அமைத்தவுடன் முதல் நடவடிக்கை

கடந்த 19 மாதகாலமாக அமுலில்இருந்து ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் அவசரகால சட்டத்தை ஜனதா கட்சி ஆட்சி அமைக்கப்பட்டவுடன் முதல் நடவடிக்கையாக நீக்கிவிடும் என்று கல்கத்தாவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் ஜனதா கட்சித் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய் கூறியுள்ளார்.

0 0 0

## தேர்தல் நான்கு நாட்கள் நடக்கும் முடிவு மார்ச் 22ல்வெளியாகும்

ஆருவது லோக சபாவுக்கான தேர்தல் மார்ச் 16-ம் திகதி நடைபெறும் என்று நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. 7 நாட்களுக்குள் வேட்புமனு தாக்கல் செய்யப்படவேண்டும் என்றும் தேர்தல் 4 நாட்கள் நடைபெறும் என்றும் மார்ச் 22-ம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

0 0 0

## காழ்ப்பு உணர்ச்சியே எதிர்ப்புக்கு காரணம் என்கிருர் கருணநிதி

'காழ்ப்பு உணர்ச்சியைக் கொட்டித் தீர்ப்பதைத் தவிர வேறு எந்தப் பணியினுலும் எம்மை எதிர்ப்பவர்களுக்கு நிம்மதி ஏற்படுவதில்லை என்று தி. மு. க. தலைவர் திரு. மு. கருணநிதி முரசொலி நாளிதழில் உடன்பிறப்புக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருக்கிருர். 'பத்தப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதுபோன்ற இழிமொழிகள் கேட்டுப் பதறினுய், துடித்தாய் பதிலுக்குப் பதில் சொல்லியாக வேண்டுமெனத் துள்ளினுய் ஆனல் இன்று அந்த முறையை அரசியல் ஆயுதமாகக் கொண்டவர்கள் அவதூறுகூறக்கூற நாம்உயர்ந்து நாளும் வளர்ந்துகொண்டிருக்கிருேம் என்பதைக்கண்டுணர்ந்து அக்கடுமொழிகளுக்காகக் கவலைகொள்ளத்தேவையில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டாய் என்று திரு. கருணநிதி உடன்பிறப்புக்கான கடிதத்தில் மேலும் கூறியிருக்கிருர்.

0 0 0

## ஆளும் காங்கிரஸ் பிரமுகர் தி. மு. க.வில் சேர்ந்தார்

தஞ்சையைச் சேர்ந்தவரும், காங்கிரஸ் பிரமுகருமான வி. பார்த்தசாரதி காங்கிரஸில் இருந்து விலகி தி. மு. க.வில் சேர்ந்தார். இந்திராகாங்கிரஸின் ஜனநாயக விரோதப் போக்கை எதிர்த்தே தான் அக்கட்சியில் இருந்து விலகி தி. மு. க.வில் சேர்ந்துகொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

0 0 0

## நம்பூதிரிபாத் குற்றச்சாட்டு

கோளத்தில் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கிகளைப்பயன்படுத்துவதில் எதிர்க்கட்சிகளுக்குத் தடைவிதிக்கப்படுகிறதென்றும் மீண்டும் எதிர்க்கட்சியினர் கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் கூறியுள்ளார்.

0 0 0

## சீர்திருத்தம் வேண்டுவோர்

'பரிவர்த்தன வாதிகள்' என்ற புதிய கட்சி கேரள அரங்கில் தோன்றியுள்ளது. இக்கட்சி மார்க்ஸிஸ்ட்டுகள் தலைமையிலான கூட்டணியில் பங்குபெற்றுள்ளது. 'பரிவர்த்தனவாதிகள்' என்ருல் சீர்திருத்தம் வேண்டுவோர் எனப் பொருள்.

0 0 0

## கோகலே வடபம்பாயில் போட்டி

மத்திய அரசின் சட்ட அமைச்சர் எச். ஆர். சோகலேக்கு ஏற்கனவே அவர் வெற்றியீட்டிய வடக்கு பம்பாய்த் தொகுதிக்கு ரிக்கட் கொடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஜனநாயகக் காங்கிரஸ் என்ற புதிய இயக்கம் ஒன்று தமிழ்நாட்டில் உதயமகியுள்ளது. இந்த இயக்கத்தின் அமைப்புக் கூட்டம் சென்னை அமைந்தகரையில்உள்ள திரு. வி. க. பூங்காவில் நடந்தது. அகில இந்திய ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராமின் தலைமையின்கீழ் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள தாம் என்றும் தயார் என்று பொதுச் செயலாளர் திரு. பி. ஆர். ராஜேந்திரன் தெரிவித்தார்.

0 0 0

## சென்னையில் பொதுக்கூட்டங்களுக்கு தடை

பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும்வகையில் பொதுக்கூட்டங்களையோ, ஆர்ப்பாட்டங்களையோ, ஊர்வலங்களையோ நடத்துவதை நிறுத்தும்வகையில் சென்னையில் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சென்னை நகரின் தெருக்களில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள், நடத்துவதற்கே 14 நாள் ஒத்தடை யுத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளது என்று நகர பொலீஸ் கமிஷனர் திரு. கே. செந்தாமரை அறிவித்தார். (உ)

# சலுகைகளை வழங்குவதன் மூலம் உரிமைத்தாகத்தை தணிக்கமுடியாது

## உடுப்பிட்டி சு. க. வாலிப முன்னணி அனுராவிடம் மகஜர்

உடுப்பிட்டி, வெள்ளி

''ஏதாவது சலுகைகளை வழங்கித் தமிழ்மக்களின் உரிமைத் தாகத்தைத்தணித்து விடலாமென்று கருதித்தலைவர்களுடன் அரசியல் ஒப்பந்தங்கள் செய்வதை நாம்வரவேற்க வில்லை. பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தம் ஆகியவற்றிற்கெல்லாம் என்ன நடந்தன என்பது இந்நாட்டிலுள்ளோர் நன்கறிந்தது. மேலேயிருந்து கீழ்நோக்கி செய்யப்படும் ஒப்பந்தங்கள் எதுவுமே எந்தவிதபலனையும் அளிக்காது என்பது இரு ஒப்பந்தங்களிலிருந்தும் புலனாகியுள்ளது. அதற்குப் பதிலாக சாதாரண தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் சமரசமான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதையே நாம் வரவேற்கின்றோம்''

இவ்வாறு கோரும் மகஜரொன்றை உடுப்பிட்டித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வாலிப முன்னணித் துணைக்கொ... இட்டமில் ஆலோசகரும், அகிலஇலங்கை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணித் தலைவருமான திரு. அனுரா பண்டாரநாயக்காவிடம் சமர்ப்பித்துள்ளது. இத்தூதுக்குழுவிற்கு உடுப்பிட்டித் தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரதம அமைப்பாளர் திரு. கே. ரி. இராசசிங்கம் தலைமை வகித்தார்.

இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட தமிழர்களுக்கு அரசியல், பொருளாதார மற்றும் இதரா ரீதியிலும் பிரச்சினைகள் உண்டு என்பதை முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும், தமிழர்களின் பிரச்சினைகள், அவர்களின் நியாயமான அபிலாசைகள், விருப்பங்களை மையமாகக் கொண்டதேயாகுமென்றும், இந்த உண்மையை இந்நாட்டில் வாழும் சிங்கள மக்கள் உணர்ந்து, ஏற்றுக்கொண்டு பரிகாரம் காணமுன் வரவேண்டுமென்றும், எனவே தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கும் பொறுப்பைச் சிங்கள மக்களும், அரசாங்கமும் மிகவும் நிதானத்துடனும் அணுகமுன்வரவேண்டும் என்றும் அம்மகஜரில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இன்றைய ஜனநாயக பாராளுமன்ற பிரதிநிதித்துவ ஆட்சிமுறையில் எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கும்போது சாதாரண தமிழ்-சிங்கள மக்களுக்கிடையிலான அரசியல் ஒப்பந்தங்களுக்கு வழிவகை செய்யமுன் வரவேண்டும்.

### அமைச்சர்சூரியர்தலைமையில் விசாரணைக் குழு வேண்டும்

விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நியாயமானவிடயங்களைச் சேர்த்துக்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப்பீடம் கட்சி உபதலைவரான அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியரின் தலைமையில் விசாரணைக்குழுவொன்றை அமைக்க முன்வரவேண்டும்.

இந்த விசாரணைக்குழு வழங்கும் அறிக்கையை ஏற்றுக் கொண்டு, தேர்தல் விஞ்ஞாபனத்தில் அதனைச் சேர்த்து எதிர்வரும் பொதுத்தேர்தலிலே இந்நாட்டில் வாழும் தமிழ்-சிங்கள மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தைப்பெற்று தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணமுன்வரவேண்டும்'' (இ)

## பேரவைக் கூட்ட நிறுத்தத்தால் நிர்வாகத்திற்குத் தடங்கல் இல்லை

### அமைச்சர் பீலிக்ஸ் கூறுகிறார்

கொழும்பு, வெள்ளி

தேசிய அரசுப் பேரவையின் கூட்டத்தொடரை நிறுத்தி வைத்திருப்பதன் மூலம் பொது நிர்வாகத்தில் எந்தவித பாதிப்பும் இருக்கமாட்டாது என்று நீதி அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயகா கூறியிருக்கிறார். மத்தியகம என்ற இடத்தில் மகாவித்தியாலய கைத்தொழில் பொருட்காட்சியை ஆரம்பித்துவைத்து அமைச்சர் பேசினார்.

1970ல் ஆட்சி பீடமேற்ற போது கூறிய வாக்குறுதிகளில் எஞ்சியுள்ளவற்றை நிறைவேற்ற அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்ற வேலைநிறுத்தம் தொழிலாளரின் நன்மைக்காக நடத்தப்படவில்லை. அரசைக்கவிழ்க்க லங்கா சமசமாஜக் கட்சி எடுத்த நடவடிக்கை இது என்றார் அவர். அரசாங்கத்திலிருந்தபோது லங்கா சமசமாஜக்கட்சி வைத்திருந்த கொள்கை வேறு. இப்போது கடைப்பிடிக்கும் கொள்கைவேறு என்று அமைச்சர் குறிப்பிட்டார். [ஆ]

### கொழும்பிலும் கதவடைப்பு

நேற்று கொழும்பில் பல இடங்களில் கடைகள் பூட்டப்பட்டு கறுப்பு, வெள்ளைக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததாக கொழும்பு சென்றிருந்த நமது விசேட நிருபர் யோகி அறிவிக்கிறார். (ஆ)

### ஜி. ஜி.யின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துள்ளது. தகனக்கிரியை முடிவடையும் வரை சகல பாதைகளிலும் விசேட பஸ் சேவைகள் நடைபெறும்என்று கோண்டாவில் இ. போ. ச. சாலையதிபர் அத்தியட்சகர் திரு. எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

**பொலிஸ் ஏற்பாடு**

அமரர் ஜி. ஜி. யின் இறுதி ஊர்வலத்தின்போது மேலதிக பொலிசார் சேவையில் ஈடுபடுத்தப்படுவர். பிரதான வீதியிலுள்ள தமிழர் கூட்டணிக் காரியாலயத்திலும், வீரசிங்கம் மண்டபத்திலும் பூதவுடல் இருக்கும்வரை பிரதான வீதி வாகனப்போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டிருக்கும். ஜன நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக பொலிசார் இந்த ஏற்பாட்டைச் செய்ய முடிவு செய்துள்ளார்.

**ஜனாதிபதி அஞ்சலி**

ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவா இன்று கொழும்பில் ஜி. ஜி. யின் இல்லத்துக்குச்சென்று அஞ்சலி செலுத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, தெனிநுவர எம்.பி. திரு. ஹேனிமெல் உட்பட ஆயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர். இராணுவ கமாண்டர் திரு. சேபால அட்டியகலேயும் அஞ்சலி செலுத்தினார்.

பிரதம நீதியரசர் மற்றும் நீதியரசர்கள் விஜயசுந்தரா, தாமோதரம், ரத்வத்தை, ராஜபத்திரானா, மல்கம் பெரேரா, வைத்திலிங்கம், சிறிமானே, விஜயவர்த்தனா, ராஜரத்தினம், விமலரத்னா மற்றும் உயர் நீதிமன்ற நீதிபதிகள் சிவா செல்லையா, எச். ஏ. டி. சில்வா, சிறிவர்த்தனா, ரணசிங்க ஆகியோரும் அமைச்சர்கள் கொப்பேகடுவ, குமாரசூரியர், பீட்டர் கெனமன், ரி.பி. சுபசிங்கா, சிறிவர்த்தனா ஆகியோரும் மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தினர். கொழும்பு சட்டத்தரணிகளும் பெருமளவில் திரண்டிருந்தனர்.

### மக்களின் கேள்விகளுக்கு கார்ட்டர் நேரில் பதில்!

வாஷிங்டன், பெப். 11

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் பொதுமக்களின் கேள்விகளுக்கு வானொலி மூலம் பதிலளிக்க விருக்கிறார்.

இப்புதிய நடவடிக்கையை திரு. கார்ட்டர் அடுத்த மாதம் 5ந் திகதி முதல் மேற்கொள்ளவிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்ற எவரும் இவ்விதம் பொதுமக்களின்கேள்விகளுக்கு வானொலியில் பதிலளிக்கும் நடைமுறையைக் கைக்கொண்டதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### இந்திய ஜனாதிபதி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார்.

**வாழ்க்கை வரலாறு**

1905-ம் ஆண்டு மே மாதம் 13-ம் திகதி ஜனப் அகமத் அஸாம் மாநிலத்தில் பிறந்தார். 1936ம் ஆண்டு தேசிய காங்கிரஸில் ஜனப் அகமத் சேர்ந்தார். சுதந்திரப்போராட்டங்களில் ஈடுபட்டு இருதடவைகள் சிறைவாசம் அனுபவித்தவர் இவர். 1945ம், 1946ம் ஆண்டுகளில் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும் இருந்த இவர், 1946ம் ஆண்டில் இருந்து 1952ம் ஆண்டுவரை அஸாமின் அட்வகேட் ஜெனரலாகப் பணியாற்றிவந்தார். 1954-ம் ஆண்டில் ராஜ்யசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் அதே ஆண்டில் சோவியத் யூனியனுக்குச் சென்ற பாரத வழக்கறிஞர் குழுவுக்குத் தலைமையும் தாங்கினார். 1957ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபைக்குப் பாரதப் பிரதிநிதியாகச் சென்றார்.

**பல்வேறு அமைச்சுப் பொறுப்புகள்**

1966ம் ஆண்டு அஸாம் மாநிலத்தில் நீர்ப்பாசன, மின்சார, கல்வி, வர்த்தக அமைச்சராகவும் கடமையாற்றினார்.

**ஜனாதிபதியானார்**

1974ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஜனப் அகமத் பாரத ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

நாட்டின் ஒற்றுமைக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்து அமரத்துவமடைந்துள்ள ஜனாதிபதி அகமத் ஒரு சிறந்த விளையாட்டு வீரருமாவார் என்பது குறிப்பிடத்தது. (உ)

## தென்மராட்சி பகுதியில் அறக்கொட்டியான் புழுவால் நெற்பயிர்கள் நாசம்

### 1500 ஏக்கர் பாதிப்பு

யாழ்ப்பாணம். சனி

கைதடி, நாவற்குழி, மறவன்புலோ, தனங்கிளப்பு ஆகிய பகுதி வயல்களில் உள்ள நெற்பயிர்களை அறக்கொட்டியான் புழு அழித்து வருவதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 1,500 ஏக்கர் நெல் வயல்களில் உள்ள நெற்பயிர்களை அறக்கொட்டியான் புழு முற்றாக நாசம் செய்து விட்டன என்றும் விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இவ்வயல்களில் உள்ள பயிர்களில் இருந்த நெல் மணிகளும் நாசமாக்கப்பட்டு சண்டுகள் மட்டுமே வயல்களில் உள்ளனவாம். நெல்மணிகள் நிலத்தில் கொட்டப்படுகின்றன.

நெணியான் முதல் கொல்லங்கிராய், மறவன்புலோ வரையிலான பகுதி வயல்களிலேயே இப்புழுவினால் பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளன.

விவசாயப் பகுதியினரிடம் இதுபற்றி புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயப்பகுதி அதிகாரிகளும் இவ்வயல்களைப் பார்வையிட்டுச் சென்றுள்ளனர். (இ)

### இறுதியாத்திரை செல்லும் வழி!

நல்லூர், கோப்பாய், நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, நெல்லியடி, மாலிசந்தி ஊடாக பருத்தித்துறை பஸ் நிலையம் வரை மோட்டார் பவனியில் வரும் பூதவுடல் அங்கிருந்து பருத்தித்துறை-வல்வெட்டித்துறை வீதியில் இருக்கும் குடும்ப மயானத்திற்கு கால்நடையாக எடுத்துச்செல்லப்படும்.

......

### அமைச்சர்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டைலேத் தாங்கிய மோட்டார் காரும் அதைத் தொடர்ந்து இருநூறுக்குமேற்பட்ட கார்களும் ஊர்வலமாக கொழும்பு புறப்பட்டது. இளைஞர் பேரவையினர் உதயசூரியன் கொடிகளும் மலர்வளையமும் சாற்றி அணிவகுத்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

விளையாட்டுத்துறை அமைச்சர் கே. பி. இரத்நாயக்கா, கட்டானை எம். பி. விஜயபால மெண்டிஸ், நீர்கொழும்பு எம். பி. திரு. டென்சில் பெர்னாண்டோ, இ. போ. ச. தலைவர் திரு. ஜே. வி. ரி. கொத்தலாவலை, தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பி.க்களும், ஆதரவாளர்களுமாகப் பெருந்தொகையானோர் விமானநிலையம் வந்திருந்தனர்.

சரியாக காலை 5 மணிக்கு பூதவுடல் இல்லத்தை வந்தடைந்தது.

......

### பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுதாபத்தை தெரிவித்தார். அமைச்சர்கள், அரசாங்க அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், நீதித்துறை அதிகாரிகள், வழக்கறிஞர்கள் ஆகியோரும் நேற்று அமரரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

**பெருந்திரளாக பொதுமக்கள் அஞ்சலி**

நேற்றுக் காலை முதல் இரவு வரை பெருந்திரளான மக்கள் ஜி. ஜி.யின் இல்லத்திற்குச் சென்று இறுதி மரியாதை செலுத்தினர்.

**இறுதி ஊர்வலம்**

இறுதி ஊர்வலம் செல்லும் பாதைகளில் இரு மருங்கிலும் நின்று அஞ்சலி செலுத்துவதற்கு அவ்வப்பகுதி தமிழர் கூட்டணிக்கிளைகள் ஏற்பாடுகள் செய்துள்ளன.

**இ. போ. ச. ஊழியர்கள்**

பலாலியிலிருந்து பூதவுடல் யாழ் நகர் நோக்கிவரும்போது கோண்டாவில் இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த சகல ஊழியர்களும் அணிவகுத்து நின்று பலர் தூவி மாலை அணிவித்து அஞ்சலி செய்வுள்ளனர்.

**விசேட விமானங்கள்**

பூதவுடலைத் தாங்கிவரும் விமானம் காலை 9 மணிக்கு பலாலியை வந்தடையும். என்றும் அமைச்சர்களும், மற்றும் பேரவை உறுப்பினர்களுடன் மற்றொரு விமானம் தொடர்ந்து பலாலி வந்தடையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

**மட்டக்களப்பு திருமலை அனுதாபிகள்**

மட்டக்களப்பிலிருந்தும் திருகோணமலையிலிருந்தும் மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்தும் தமிழர்கூட்டணி ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் திரண்டவண்ணமுள்ளனர்.

தகனக்கிரியைகளை யாழ். முற்றவெளியில் நடத்த ஏற்கனவே முடிவுசெய்யப்பட்டிருந்தபோதிலும் இறுதியில் ஜி. ஜி. யின் சொந்தக்கிராமத்தில் நடத்த முடிவுசெய்யப்பட்டது. (ஆ)

# 'சோர்ந்து கிடந்த தமிழ் இனத்தைத் தட்டிஎழுப்பி உணர்ச்சி ஊட்டியவர்!"

## தமிழர் சுயாட்சிக்கழகத் தலைவர் இரங்கல்

யாழ்ப்பாணம், சனி

'தமிழர்உள்ளக்கோயிலில் அரை நூற்றுண்டுகாலமாக உறைந்திருந்ததலைவர் மறைந்துவிட்டார். அவருக்கு எமது கோடானுகோடி அஞ்சலி'

இவ்வாறு தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம், தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மறைவுகுறித்து விடுத்துள்ள இரங்கற்செய்தியில் தெரிவித்துள்ளார்.

திரு. நவரத்தினம் தமது செய்தியில் மேலும் கூறியிருப்பதாவது:

'சேர்.பொன்னம்பலம் இராமநாதனுக்குப்பின் வந்த சரித்திர புருஷன். சோர்ந்துகிடந்த இனத்துக்கு அரசியல் அறிவையும் உணர்ச்சியையும் ஊட்டி இனத்தைத் தட்டிஎழுப்பியவர். நம்பிக்கையைப் புகுத்தியவர், இனத்தின் தனித்துவத்தை நிலைநாட்டியவர், தலைநிமிர்ந்து நிற்கச்செய்தவர். அஞ்சா நெஞ்சம் படைத்த பெரும் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் இல்லாதிருந்தால் தமிழ்இனம் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே நசுக்கி ஒதுக்கப்பட்டிருக்கும் என்பதை அரசியலில் மாறுபட்டவர்கள்கூட மறுக்கமுடியாது. வருங்காலத்தில் சரித்திரம் எழுதுபவர்கள் ஜி. ஜி. சகாப்தத்துக்கு முக்கிய இடம் அளிப்பார்கள் என்பது திண்ணம். அவரின் அளப்பரிய சேவைக்கு அன்புகலந்த நன்றி செலுத்துவதுமல்லாமல் அவரின் நினைவு எமது உள்ளங்களில் என்றென்றைக்கும் சுடர்விட்டெரியட்டும்.'

### எழுதுவினைஞர் சங்கம் அஞ்சலி

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு. இ. பேரின்பநாயகம் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கற்செய்தி இது:-

'அமரர் திருச்செல்வம் கியூ. ஸி. அவர்களைத்தொடர்ந்தாற்போல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களின் ஒருவராகிய திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், கியூ. ஸி. எம் மத்தியில் இருந்து திடீரெனப் பிரிந்து விட்ட செய்தி கேள்வியுற்று அதிர்ச்சி அடைந்துள்ளோம்.

பல்வேறு திசைகளிலும் பிரிந்து நின்று செயல்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து இனவிடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இம் முக்கிய காலகட்டத்தில் அரசியல் சாணக்கியனாகிய திரு. பொன்னம்பலம் அவர்களின் திடீர் மறைவு பெரும் நஷ்டமாகும். உலகப் பிரசித்தி பெற்ற தமிழ்த் தலைவர்கள் நீதி விசாரணையின் பொழுது அமரர் பொன்னம்பலம் ஆற்றிய சட்டப்பணி மகத்தானது. அவ் வழக்கின் மூலம் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கும் அமரருக்கும் இடையில் ஏற்பட்ட நெருங்கிய பிணைப்பின் மூலம் எதிர்காலத்தில் இன விடுதலைப் போராட்டத்தில் பல பணிகளை நிறைவேற்ற திட்டமிட்டிருந்தோம். விதி குறுக்கே நின்றுகொண்டது.

### வெளியேற விரும்புகின்றனர்

தாருஸ்ஸலாம், பெப். 11

''தென்னாபிரிக்காவிலுள்ள வெள்ளையர்களில் நாற்பத்திரண்டு சத வீதத்தினர் வெளிநாடுகளுக்குக் குடிபெயர்ந்து செல்ல விரும்புகிறார்கள். தற்போதைய இனவாத ஆட்சியின் கொள்கைப் போக்கினால் தமது எதிர்காலம் நம்பிக்கையற்றதாக இருக்குமென இவர்கள் அஞ்சுகிறார்கள்.''

தென்னாபிரிக்கப் பத்திரிகையான 'ஸ்டார்' வெள்ளையர் மத்தியில் நடாத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின் பெறுபேறுகள் இவ்வாறு கூறுகின்றன. 25 சத வீதமான வெள்ளையர்கள் தற்போதைய ஆட்சியாளரின் கொள்கையைத் தாம் விரும்பவில்லை என்று அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

### எழுதுசேவையாளர் சங்கம் அனுதாபம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு.ஜி.ஜி. பொன்னம்பலத்தின் திடீர் மறைவு இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும் என்று அரசாங்க எழுதுசேவையாளர் சங்கம் ஜி.ஜி.யின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

தமது நீண்ட அரசியல் வாழ்வில் அவரின் சிந்தனையில் தமிழ் மக்களின் நலனே மேலோங்கி நின்றது. தமிழ் மக்களும் இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழவேண்டும் என்று விரும்பியிருந்தார் என்றும்அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஈடில்லாப் பேரிழப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

'ஈழத் தமிழினத்தின் நல்வாழ்வுக்காக நீண்டகாலம் பாடுபட்ட திரு. ஜி. ஜி.பொன்னம்பலத்தின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழினத்தின் சோதனைமிக்க இக்கால கட்டத்தில் அவரின் திடீர் மறைவு ஒவ்வொரு தமிழனுக்கும் மிகுந்த அதிர்ச்சியையும், துக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது'

இவ்வாறு பண்டத்தரிப்பு முத்தமிழ் மன்றத்தின் செயலாளர் திரு. நா. மா. கந்தசாமி மேற்படி மன்றத்தின் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (உ)

### யாழ். முஸ்லிம் மக்கள் அனுதாபம்

யாழ்ப்பாணம், சனி

ஜி. ஜி.யின் மறைவு குறித்து முன்னாள் யாழ். மாநகர உதவி மேயரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ். தொகுதி அமைப்பாளருமான ஜனாப் எம். ஜி. பஸீர் யாழ். முஸ்லிம் மக்கள் சார்பில் அனுதாபச் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

அவர்தம செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

'தனிப்பெருந் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் திடீர் மரணத்தை முன்னிட்டு அவரது சிறந்த நண்பர்களாகிய யாழ்ப்பாணம் முஸ்லீம்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றார்கள்.

யாழ். முஸ்லீம்களின் முன்னேற்றத்தில் பங்கு கொண்டு ஒரு முஸ்லீம் கல்லூரியை ஸ்தாபித்தவருள் ஒருவராகவும், பொம்மைவெளி முஸ்லீம் குடியேற்றத் திட்டத்திற்கு வித்திட்டவருமான தனிப்பெரும் தலைவனின் ஆத்மா சாந்தியடைய யாழ். முஸ்லீம் மக்கள் பிரார்த்திக்கின்றோம்.

### சங்கானை ப. ச. அனுதாபம்

யாழ்ப்பாணம், சனி

தமிழ் மக்களின் விடுதலைக்காக நீண்ட நாட்களாகப் பாடுபட்ட பேரொளி இன்று திடீரென மறைந்துவிட்டது. அமரர் ஜி. ஜி.யின்மறைவு எம்மை எல்லாம் அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டது.

இவ்வாறு சங்கானைப் பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். கே. திருச்சிற்றம்பலம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. ஜி. ஜி.யின் குடும்பத்தாருக்கு அனுதாபத் தந்தி ஒன்றையும் பட்டின சபை சார்பில் திரு. திருச்சிற்றம்பலம் அனுப்பியுள்ளார்.

பட்டின சபை முன்றலில் கறுப்புக்கொடி ஒன்றும் பறக்க விடப்பட்டுள்ளது. (இ)

### பருத்தித்துறை ஏற்பாடு

நெல்லியடி, வெள்ளி

அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இறுதிக்கிரியைகளுக்கான ஏற்பாடுகள் யாவற்றையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் பருத்தித்துறை தமிழ் இளைஞர் பேரவையினரும், அமரரின் ஊரைச் சேர்ந்த அல்வாய்ப் பகுதி இளைஞர்களும் கூட்டாகச் செய்து வருகின்றனர்.

வடமராட்சியில் பிறந்து புகழ் பெற்ற மறைந்த தலைவரின் பூதவுடல் நாளை தகனக்கிரியைக்காக பருத்தித்துறை அல்வாய்க்கு எடுத்து வரும் வழியில் வீதிகள் இருமருங்குகளிலும் மக்கள் குழுமி நின்று தமது இறுதி அஞ்சலியை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் நடை பெறுகின்றன. வடமராட்சி முழுவதும் கறுப்புக் கொடிகள் மயமாக தற்போது காட்சி தருகிறது. (ஆ)

### பேரிழப்பு

நெல்லியடி, வெள்ளி

சட்டமன்றச் சமரில் வில்லிழந்த விஜயனாக தமிழினம் இன்று தவிக்கின்றது என பருத்தித்துறைத் தொகுதி தமிழ் இளைஞர் பேரவைக் கிளையின் தலைவர் சட்டத்தரணி எஸ். கே. மனோகரன் விடுத்துள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது:

இக்கட்டான காலக் கட்டத்தில் திரு. பொன்னம்பலத்தை இழந்தது தமிழினத்திற்கே பேரிழப்பாகும். அவர் தலைவர்களுக்குரிய பல தகமைகளையும் கொண்டிருந்த ஒருதமிழ்த் தலைவர் இணையில்லா குற்றவியல் இராணி அப்புக்காத்து பொன்னம்பலத்தையும் இழந்ததால் சட்டமன்றச் சமரில் வில்லிழந்த விஜயனாக, கதையிழந்த பீமனாகச் செயலிழந்து நிற்கிறோம்.

## "இராமநாதனுக்குப் பின் தமிழருக்குகிடைத்ததலைவர்'

யாழ்ப்பாணம், சனி

''சேர் பொன். இராமநாதனின் மறைவுக்குப் பின் தமிழ் மக்களின் விடிவுக்காக உழைத்த முடிசூடாமன்னன் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கக் கடந்த அரை நூற்றுண்டு காலமாகப் போராடித் தன்னிகரற்ற தலைவனாக விளங்கினார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபக உறுப்பினரும், திரு. பொன்னம்பலத்துடன் அண்மைக் காலம்வரை நெருங்கிப் பழகியவருமான சட்டத்தரணி திரு. ஜி.பி.பலசிங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அனுதாபச் செய்தியில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

''கிரிமினல் சட்ட மேதையாகத் தனக்கே தனியிடத்தைப் பெற்றுப் புகழின் உச்சியை அடைந்தார். ஐக்கிய நாட்டுப் பொதுச்சபைக் கூட்டத்தில் இலங்கைத் தூதுக்குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டுத் தமிழ்மக்களுக்கு மட்டுமல்ல, தான் பிறந்த நாட்டுக்குமே பெருமையையும் புகழையும் பெற்றுக்கொடுத்தார்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, வாழைச்சேனை கடதாசித்தொழிற்சாலை, பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் இவைகளெல்லாம் இத்தலைவரின் புகழுக்கு ஞாபகச் சின்னங்களாக இப்பொழுதும் இருந்து வரும். (இ)

## இந்திய ஜனாதிபதி—

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பாரதஜனாதிபதி ஜனாப் பக்ருதீன் அலிஅகமத் நேற்றுக்காலை 8–52 மணிக்கு புதுடில்லி ராஷ்டிரபதி பவனியில் மாரடைப்பினால் காலமானார்.

### 13 தினங்கள் அரசுமுறை துக்கம்

ஜனாதிபதியின் மறைவையடுத்து நாடெங்கும் 13 தினங்கள் அரசுமுறை துக்கதினங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் மரணச்சடங்குகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### மக்கள் படையெடுப்பு

ஜனாதிபதி காலமான செய்தியறிந்ததும் பெருந்திரளானமக்கள் ராஷ்டிரபதி பவனுக்குப் படையெடுத்தனர்.

காலை 6 மணிக்கு குளியலறைக்குள்சென்ற ஜனாதிபதிக்கு ஐந்து நிமிடநேரத்தில் திடீர் மாரடைப்பு ஏற்பட்டதாகவும் அவரது குடும்ப டாக்டரான கரோலி ஜனாதிபதியின் இருதயத்தை இயக்கவைக்க முயற்சி எடுத்தாரென்றும் அவ்வேளை, ஜனாதிபதி ஏகோ மரணமுற்றாரென்றும் மேலும் மூன்று இருதய நோய் நிபுணர்கள் விரைந்து வந்து தம்மாலான சகல முயற்சிகளையும் மேற்கொண்ட போதிலும் அவை பயனளிக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது.

### விருப்பமில்லாத உடன்பாடு

நேற்றுமுன்தினம் உற்சாகமாகக் காணப்பட்ட ஜனாதிபதி அகமத் நேற்றுக்காலை வழமைபோல் காலை 5-30 மணிக்கே எழுந்துவிட்டார். தொழுகையின்பொருட்டுஅவர் மசூதிக்குச் செல்லவேண்டாமென்று டாக்டர்கள் கூறிய போது அதற்கு அவர் விருப்பமில்லாமலே உடன்பட்டார்.

### இந்திராவும் அருகில்

ஜனாதிபதி மரணிக்கும்போது அவரருகில் மனைவி பேகம் அகமத், ஜனாதிபதியின் இருசகோதரிகள், பிரதமர் இந்திரா காந்தி, காங்கிரஸ்கட்சித் தலைவர் திரு. பரூவா ஆகியோர் இருந்தனர்.

### ஜெகஜீவன் அஞ்சலி

மரணச்செய்தி கிடைத்ததும் முன்னாள் மத்திய விவசாய மந்திரி திரு. ஜெகஜீவன்ராம், திரு. பகுகுணா, மத்திய அரசு மந்திரிகள் ஆகியோர் வந்து ஜனாதிபதிக்கு அஞ்சலி செலுத்தினர்.

ராஷ்டிரபதி பவனில் பெருந்தொகையான மக்கள் திரளுவர் என எதிர்பார்க்கப்படுவதால் மதச்சடங்குகள் முடிந்து சடலம் ராஷ்டிரபதி பவனில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்படும்வரை மக்கள் பொறுத்துக் கொள்ளவேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### தற்காலிக ஜனாதிபதியாக பதவியேற்பு

தற்காலிக ஜனாதிபதியாக உபஜனாதிபதி திரு. ஜ[illegible] பாரத தலைமை நீதிபதி திரு. எம். ஏச். பேக் முன்னிலையில், நேற்று முற்பகல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பிரதமர் திருமதி இந்திராகாந்தி முப்படைத்தளபதிகள் ஆகியோர் எளிமையாக நடந்த இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

### கோலாலம்பூரில் சுகவீனம்

தென்கிழக்கு நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அகமத், திங்கட்கிழமை கோலாலம்பூரில் சுகவீனம் அடைந்தார். அவரது குடும்படாக்டர் கரோலியின் ஆலோசனையின்பேரில் பிலிப்பைன்ஸ், பர்மா ஆகிய நாடுகளுக்கான விஜயங்களை ரத்துச் செய்துவிட்டு அவர் புதுடில்லி திரும்பினார்.

ஜனாதிபதியின் மறைவையடுத்து அகிலஇந்தியவானொலி தனது வழமையான நிகழ்ச்சிகளை ரத்துச்செய்தது. பாரத தேசியக்கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் மரணச்செய்தி நாடுபூராவையும் பெரும் அதிர்ச்சியிலும் துக்கத்திலும் ஆழ்த்தியுள்ளது.

### பிறந்த இடத்தில் மக்கள் வெள்ளம்

மரணச்செய்தி எட்டியதும் ஜனாதிபதியின் பிறப்பிடமான அஸாம் மாநிலத்தில் உள்ள பொசாட்டில் இருக்கும் அவரது இல்லத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### அஸாம் முதல்வர் துக்கம்

ஜனாதிபதியின் மறைவை அடுத்து அஸாம் அரசு அவசர மந்திரிசபைக் கூட்டம் ஒன்றை நடத்தியது.

அஸாம் மாநில முதலமைச்சர் திரு. சிம்கார், தேசிய ஒற்றுமைக்கு உழைத்ததுடன் மத வழிபாட்டில்மிகுந்த நம்பிக்கைகொண்டவராகவும் விளங்கியவர் ஜனாப் அகமத் என்று கூறினார். குஜராத் கவர்னர் விப்பநாத் தமது அனுதாபச் செய்தியில் 'பாரதத்தின் அரும் புதல்வர்களில் ஜனாப். அகமதும் ஒருவர். அவர் இறுதிவரை மக்களின் அன்புக்குப் பாத்திரமானவராகத் திகழ்ந்தார் என்றும் தெரி

(4ம் பக்கம் பார்க்க)

# 'சிறந்த நிர்வாகமுள்ளது சுன்னுகம்பட்டினசபையே!'

## சந்தைக் கட்டிடத் திறப்பு விழாவில் உள்ளூராட்சி ஆணையாளர் பாராட்டு

மாவிட்டபுரம், வெள்ளி

''இலங்கையிலுள்ள 86 பட்டண சபைகளில் சுன்னுகம் பட்டணசபையே சிறந்த நிர்வாகத்தைக் கொண்ட முதல் தர பட்டணசபையாக விளங்குகிறது. தலைவரது விடா முயற்சியும், ஊழியர்களது ஒத்துழைப்பும், பொதுமக்களது ஆதரவுந்தான் இதற்குக் காரணமாகும்.''

இவ்வாறு சுன்னுகம் பட்டணசபையின் ஆதரவில் நிறுவப்பட்ட நவீன சந்தைக்கட்டடத்தைச் சுன்னுகத்தில் திறந்துவைத்துப் பேசிய உள்ளூராட்சி ஆணையாளர் திரு. டபிள்யூ, ஈ. வி. எஸ். டி. அல்விஸ் கூறினுர்.

பட்டணசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தலைமையில் நடந்த இத்திறப்பு விழாவில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

''நாடு பூராவும் இப்படியான நவீன சந்தைகளை அமைப்பதால் பாவனையாளர்களுக்கு நல்ல பயனும், விவசாயிகளுக்குத் தங்கள் பொருட்களைச் சந்தைப்படுத்த நல்ல வாய்ப்பும் கிடைக்கிறது. இதன் மூலம் பட்டணசபைகளுக்குக் கூடிய வருமானமும் கிடைக்க ஏதுவாகிறது. சுன்னுகத்தில் அமைக்கப்பட்ட சந்தைபோல் கிளிநொச்சி, கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய இடங்களிலும் விரைவில் பல லட்ச ரூபா செலவில் நவீன சந்தைகள் அமைக்கப்படவுள்ளன.

சுன்னுகம் பட்டணசபையின் நிர்வாகம் சிறந்த முறையில் இயங்கி, பலவேறுபட்ட சேவைகளைச் செய்துள்ளதுடன் நீர் விநியோகம், நீச்சல் தடாகம், மீன்சந்தை அமைப்பு போன்றவற்றுக்கும் திட்டங்கள் தீட்டியுளளது. இவற்றிற்கு என்னுல் முடிந்த உதவிகளையளித்து நிறைவேற்றி வைப்பேன்.''

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. பி.எல்.பற்றிக் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''சுன்னுகம் பட்டணசபை சிறந்த முறையில் இயங்கிச் சோஷலிஸ நடவடிக்கைகளை அமுல்படுத்திவரும் அதன் தலைவர் திரு. நாகலிங்கம் பெரிதும் பாராட்டப்படவேண்டியவர். அவரது சிறந்த நிர்வாகம் காரணமாகவே இப்பட்டணசபை கலைக்கப்படவில்லை. யாழ். மாவட்டத்திலேயே பிரபல்யம் பெற்ற இச்சந்தையை நவீன முறையில் அமைத்துள்ளது மிகவும் பயன்தரக்கூடியது.''

பட்டணசபைத் தலைவர் திரு. பொ. நாகலிங்கம் தமது தலைமையுரையில்: ''பட்டண சபைகள், பட்டண மக்களின் சேவையைக் குறிக்கோளாகக் கொண்டே இயங்கவேண்டுமெனவும் அந்த ரீதியில் தமது சபை இயங்கியதாலேயே பட்டணத்தை முன்னேற்ற முடிந்ததென்றும் மற்றும், எதிர்காலத் திட்டங்களுக்கும் பொதுமக்கள் ஆதரவளித்து நிறைவேற்றி வைப்பார்களெனத் தாம் நம்புவதாகவும்'' கூறினுர்.

மற்றும் சபை உறுப்பினர்களான திரு. ஆசீர்வாதம் ஹென்றி, திரு. மா.நடராசா ஆகியோரும் உரையாற்றினுர்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## வீடமைப்பு இலாகா வாடகை குடியிருப்பாளருக்கு சலுகை

கொழும்பு, வெள்ளி

குறைந்த வருமானத்துடன் தேசிய வீடமைப்பு இலாகாவின் மாடிவீடுகளில் வாடகைக்குக் குடியிருப்போருக்கு வீடமைப்பு அமைச்சு சில சலுகைகளை அளித்துள்ளது.

குடியிருப்போரின் வாடகை விடயத்தில் 10 ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

மாலிகாவத்தையில் அவசர தேவையின்பொருட்டு குடியமர்த்தப்பட்ட பலகைவீட்டுக்காரரின் வாடகையில் 2ரூபா 50 சதம் குறைக்கப்படுகிறது. 15ரூபா முதல் 20 ரூபா வரை வாடகைசெலுத்திவரும் ஏனைய தரத்தில் உள்ளோரின் வாடகையில் 5 ரூபா குறைக்கப்பட்டுள்ளது.

மார்ச் 1-ம்திகதிமுதல் இந்த வாடகைக் குறைப்புத்திட்டம் அமுலுக்கு வருவதாக வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர்கெனமன் தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை வாடகைபபாக்கி செலுத்தவேண்டியிருந்தால், ஏற்கனவே இணக்களத்திடமுள்ள வாடகை முற்பணத்திலும் பார்க்க மேலதிகமாக வழங்கப்படவேண்டியிருந்தால் மட்டுமே நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஆ)

......

## பாராட்டுவிழா

வவுணதீவு, வெள்ளி

அகில இலங்கை ஆசிரியர் சங்கச் சம்மேளனம், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இவற்றின் தலைவரான மட்டக்களப்பு அரசடி மகா வித்தியாலய அதிபர் திரு, டி. எஸ். கே. வணசிங்காவுக்கு பாராட்டு விழாவொன்றை நடாத்துவதற்கு ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் மட்டக்களப்பு கிளை மேற்கொண்டிருப்பதாக அதன் செயலாளர் திரு. சின்னத்துரை தகவல் தெரிவித்தார்.


மிளகாய் பயிர்செய்கிறீர்களா?

அப்படியாஞல் குருமன் நோயை கட்டுப்படுத்த இன்றே பாவியுங்கள்

BAYER

பொலிமட் எல்.சி 50%

மேற்கு ஜர்மன் பாயர் ஸ்தாபனத்தின் புதிய தயாரிப்பு, ஒரு சிறந்த சர்வ பூச்சி நாசினி



நெல் · உருளைக்கிழங்கு · திராட்சை
புகையிலை · போஞ்சிவகை · தோடை
காய்கறி · பூஞ்செடி · பருத்தி
பழவகை · கோப்பி · வெங்காயம்

மேலும் பொலிமற், திரிப்ஸ், அழுக்கணவன், வெண் ஈ, சிற்றுண்ணி, போஞ்சி ஈ, தத்துக்கிளி துளை புழுக்கள், ஆகியவற்றை கீழ்வரும் பயிர்களில் திறமாக கட்டுப்படுத்தும்.

பொலிமற் பயிர்களை ஊக்கமாகவும், திடகாத்திரமாகவும் வளரச்செய்யும்.

பொலிமற் உடன் கெந்தகம் கலக்கப்படாது
பயிர்களை பாதுகாக்க தாமதியாது
பாவியுங்கள் பொலிமற்,

தயாரிப்பாளர்.

ஹேகெம் லிமிடெட்

400 டீன்ஸ் ரோட் கொழும்பு-10

டெலிபோன் 93563 - 96331

Melville Anson Designs


பிரிட்டனில் வாழும்

## சிறுபான்மையோருக்காக ஒரு பத்திரிகை

லண்டன், பெப். 11

பிரிட்டனில்வாழும் சிறுபான்மை இனத்தவர்களுக்கென ஒருசெய்திப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்துள்ளது. பெப்ரவரி முதல்திகதியன்று பத்தாயிரம் பிரதி விற்பனையுடன் ''த ரிப்போர்ட்டர்'' என்ற இப்பத்திரிகையின் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

டாக்டர் ராஜசந்திரன்என்ற 38வயது இலங்கையரின் முயற்சியில் உருவானது ''த ரிப்போர்ட்டர்'' பிரிட்டனில்வசிக்கும் ஐரோப்பிய, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், கென்யா, சீனு, மேற்கிந்தியதீவுகள் ஆகிய நாட்டுமக்களின் நலன்களுக்காக இப்பத்திரிகை வெளியிடப்பட்டுள்ளது.

டாக்டர் சந்திரனின் பத்திரிகை, அரசியல்சார்பு அற்றது. சமூகங்கள்மத்தியில் உறவுகளை மேம்படுத்த அதுமுயன்று வரும். வாசகர்கள் கருத்தைக் கவரும் செய்திகளைவெளியிடுவதுடன் சிறுபான்மையினருக்காகப் பணியாற்றவும் செய்யும்.

மத்திய கிழக்குப்பிரச்னை:

## ஜெனீவா மாநாடு கூட்ட வால்ட்ஹெய்ம் நிபந்தனை

அம்மான், பெப். 11

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களைவிட்டு இஸ்ரேல் வெளியேறினுல் மாத்திரமே மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பானஜெனீவாமாநாடு மீண்டும் கூட்டப்படுவது சாத்தியமாகும் என்று ஜோர்தானுக்கு விஜயஞ்செய்துள்ள ஐக்கியநாடுகள் பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட் ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஜோர்தான் மன்னர் ஹுசேயினையும் சந்தித்து கலாநிதி வால்ட்ஹெய்ம் உரையாடினுர்.

### ஜோர்தான் மன்னர் விளக்கம்

மத்தியகிழக்குப் பிரச்னை தொடர்பானஜெனீவாமாநாடு மீண்டும் கூட்டப்படவேண்டும் என்று தாம் வற்புறுத்துவது, இதில் ஜோர்தானும் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனுலேதான் என்றும் இவ்வற்புறுத்தலைப் பலஸ்தீனியர்களின் பிரதிநிதிகள் என்றதோரணையில் அல்ல என்றும்ஜோர்தான் மன்னர் ஹுசேன் தெரிவித்தார். கலாநிதிவால்ட்ஹெய்ம்நேற்று ஜெருசலம் சென்றுர்.

### இஸ்ரேல் அதிகாரிகள் ஆத்திரம்

இதேவேளைஜெனிவாமாநாடு கூட்டப்படவேண்டியது பற்றி வால்ட்ஹெய்ம் கூறிய கருத்துக்கள் இஸ்ரேல் அதிகாரிகளை ஆத்திரமடையச் செய்துள்ளன. இதன் எதிரொலியாக வால்ட்ஹெய்ம் இஸ்ரேலுக்கு விஜயம்செய்யும்போது அவருக்கு குதூகலமான வரவேற்பு அளிக்கப்படமாட்டாது என்று கருதப்படுகிறது.

### மே. ஜெர்மனியிடம் சிரியா கோரிக்கை

ஜெனிவா மாநாடு மீண்டும் கூட்டப்படவேண்டும் என்று தூண்டுமாறு மேற்கு ஜெர்மனி அரசாங்கத்தை சிரியஅரசு கேட்டுள்ளது. (உ)

ஜோர்தான் விமான விபத்து:

## ராணியின் உடல் தகனம்; சிரிய அதிபரும் சமுகம்

அம்மான, பெப். 11

ஜோர்தானிய மகாராணி திருமதி அலிமா ஹுசேனின் தகனக்கிரியைகள் அம்மான் அரண்மனையில் நடைபெற்றன.

இத்தகனக் கிரியைகளில் சிரிய அதிபர்ஆசாத்தும்கலந்து கொண்டார்.

தென் ஜோர்தானில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயங்கர ஹெலிகொப்டர் விமான விபத்தில் மகாராணி திருமதி அலிமா ஹுசேனும் ஜோர்தானிய சுகாதார அமைச்சர் பஸீரும் கொல்லப்பட்டனர்.

ஜோர்தானிய மகாராணியின் அகால மறைவு குறித்து இலங்கைப்பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா, ஜனுதிபதி வில்லியம் கோபல்லாவ உட்பட ஏராளமான உலக நாடுகளின் தலைவர்கள் மன்னர் ஹுசேனுக்கு அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர். (உ)

## மார்ச் முதல் பங்கீட்டுப் பொருள் கூடியளவு விநியோகம்

கொழும்பு, வெள்ளி

அடுத்த மாதத்திலிருந்து பங்கீட்டுப் புத்தகங்களுக்கு அதிக அளவில் உப உணவுப்பொருட்கள் வழங்கப்படவிருக்கின்றன

இதன் பொருட்டு மல்லி, வெள்ளைப்பூடு, சீரகம் என்பன அதிக அளவில் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக உணவு அமைச்சு தெரிவித்தது.

இதேவேளையில் வர்த்தக அமைச்சு பாகிஸ்தான், ஏடன் சிங்கப்பூர், இந்தியா, மாலைதீவு ஆகிய நாடுகளிடமிருந்து அதிக அளவில் இறக்குமதி செய்யவிருக்கிறது. (உ)

## யார் அரசை எதிர்க்கிருர்கள்?

மாத்தறை, வெள்ளி

''தற்போதைய அரசாங்கம் செயற்படுத்திவரும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்டு பொருமை கொண்டுள்ளவர்களே அரசாங்கத்தை எதிர்க்கின்றனர். ஆனுல் உண்மை நிலை மக்களுக்குப் புரியும்'' என்று பிரதிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை மாத்தறை—பறவெகல என்ற இடத்தில் அபிவிருத்தி நிலையம் ஒன்றினைத் திறந்துவைத்துப் பேசுயில் கூறினுர்.

அவர் மேலும் பேசுகையில், ''நாட்டின் அபிவிருத்திக்காக இன்றைய அரசாங்கம்ஆற்றிய அரும் பணியைப்போல் வேறெந்தஅரசாங்கமும்செய்யவில்லை'' என்றுர்.

## திறப்புவிழா

யாழ்ப்பாணம், சனி

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிப் புதிய நூல் நிலையத் திறப்புவிழா வருகிற திங்கட்கிழமை மாலை நடைபெறவிருக்கிறது. தொழிலதிபர் திரு. க. கனகராசா, திரு. எஸ். பாக்கியநாதர் அத்தனுசியார் ஆகியோர் இவ்விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

**Regal**
Jaffna
Daily at 4-45, 7-00 & 9-30 P. M.
CAROL WHITE
JOHN MILLS
in
**DULCIMA**
(color)

From: 14-2-77
LESLIE PHILLIPS - TERRY THOMAS
in
**SPANISH FLY**
adults color
(sex-comedy - hit of the year)

**வெலிங்டன்** எம்.ஜி.ஆர். - சரோஜாதேவி
[யாழ். நகர்]
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு 4 காட்சிகள்
**பணக்காரக் குடும்பம்**

**லிடோ** ஏ. வி. எம். ராஜன் - லதா
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் நடித்த
**வீட்டுக்கு வந்த மருமகள்**

கடைசி வாரம்
**ஸ்ரீதர்** எம். ஜி. ஆர். - மஞ்சுளா
சந்திரகலா - லதா
[யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் நடித்த
**உலகம் சுற்றும் வாலிபன்**
அடுத்த வெளியீடு
**பாட்டும் பரதமும்**

**ராஜா** 6-வது வெற்றி வாரம்
[யாழ். நகர்] ஜெய்சங்கர் - நிர்மலா
தினசரி 4 காட்சிகள் நடித்த
**தாய்க்கு ஒரு பிள்ளை**

**ராணி** ஜெமினி பத்மினி
பாலையா தங்கவேலு
[யாழ். நகர்] தினசரி 4 காட்சிகள் நடித்த
**மல்லிகா**
[புதிய பிரதி]

**மனோகரா** 3-வது 'ஹவுஸ்புல்' வாரம்
காட்சிநேரங்கள் குறிப்பிட முடியாமைக்கு மன்னிக்கவும்.
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
ராதாசலூஜா
நிர்மலா
வீரப்பா
நடித்த
சத்யா மூவிஸ்
**இதயக்கனி**



[ஈஸ்மன் கலர்]

## சமயக்கல்வியின் அவசியம் பற்றி ஜனாதிபதி

கொழும்பு, வெள்ளி

''இளைஞர்களுக்கு சமயக் கல்வி அதிமுக்கியமானது'' என்று ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவ களனியில் நேற்று நடைபெற்ற சமய வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''இளைஞர்கள் தர்மகோட்பாடுகளைப்பேண வேண்டும். நம்மில் நாம் தங்கியிருந்து நாட்டின் நற்பிரஜைகளாக வாழவேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. ஒர். எஸ். பெரேரா, பிரதிக் கல்வியமைச்சர் திரு. பி. வை. துடாவை ஆகியோரும் பேசினர். (உ)

......

## திருட்டுப் பொருட்கள் மீட்பு

சங்கானை, வெள்ளி

இரவு ரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிசார் சந்தேகத்தின் மீது கைது செய்த இரு நபர்களிடமிருந்து அண்மையில் களவாடப்பட்ட பொருட்களை மீட்டெடுத்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு பண்ணாகத்தில் உள்ள கடை ஒன்றை உடைத்து உட்புகுந்த சிலர் அங்கிருந்து மண்வெட்டி, பித்தளைப் பொருட்கள் ஆகியனவற்றை களவாடிச் சென்றுள்ளனர் என்று பொலிசில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து மறுதினம் இரவு சங்கானை பொலிசைச் சேர்ந்த கான்ஸ்டபிள் பத்மநாதன் தலைமையில் ரோந்தில் ஈடுபட்ட பொலிஸ் கோஷ்டி தொல்புரம் கேணிக்கடவை சந்தியில் இருவர் சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடுவதைக்கண்டு அவர்களைவிசாரணைக்குட்படுத்தியபோது முதல் நாள் இரவு அவர்கள் இருவரும் சேர்ந்து நடாத்திய களவின் குட்டு வெளியாகியது. இப்பகுதியைச் சேர்ந்தஅரியகுட்டி ஏசுநாதன், நாகேஸ் பாலச் சந்திரன் ஆகியோரே சந்தேக நபர்களாவர்.

இருவரும் மல்லாகம் நீதிபதி திரு. ஜேசுரத்தினம் முன் ஆஜர்செய்யப்பட்டுகுற்றத்தை ஒப்புக்கொள்ளவே தீர்ப்பு வழங்குவது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30
சனி, ஞாயிறு 10-30
IRON FINGER

**வெஸ்லி**
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
ஜெய்சங்கர்
**எடுப்பார் கைப்பிள்ளை**

**நாகம்ஸ்**
[சுன்னாகம்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ரவிச்சந்திரன் – விஜயகுமாரி
**அமுதா**

தெல்லிப்பழையில்

## நவீன புகையிரதநிலையம் அமைக்க எஸ். ஜே. வி. கோரிக்கை

மாவிட்டபுரம், வெள்ளி

தெல்லிப்பழை புகையிரத நிலையத்தின் சீர்கேடுகள்பற்றி எடுத்துக்கூறி, அங்கு ஒருநவீன வசதிகளடங்கிய புகையிரத நிலையம் அத்தியாவசியமானது என்பதை வலியுறுத்தித் தமிழர்கூட்டணித்தலைவரும் காங்கேசன்துறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினருமானதிரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மகஜர் ஒன்றை அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

வசாவிளான், பண்டத்தரிப்பு, கட்டுவன், குரும்பசிட்டி, அளவெட்டி போன்ற பகுதிகளின் முக்கிய புகையிரத நிலையமாக விளங்கும் தெல்லிப்பழை புகையிரதநிலையமின்றும் பழையநிலையிலேயே காட்சிதருகிறது. முந்திய ஆட்சியாளரினால் இப்புகையிரத நிலையத்தைச் சீரமைக்க அடையாள மான்யம் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தும் நடைமுறையில் அது செயல்படுத்தப்படவில்லை.

புகையிரத நிலையத்திற்கு அண்மையில் மாவட்ட வைத்தியசாலை அமைந்திருந்தும் வசதிநிறைந்த ஒருபுகையிரதம் மிக அவசியமும், அவசரமுமான தேவை என்பதை உணர்த்துகிறது. ஆகவே தெல்லிப்பழையில் நவீன வசதிகளடங்கிய புகையிரத நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

இடைக்கால நடவடிக்கையாக வடபகுதிக்குவரும் கடுகதிப் புகையிரதங்களும் இதில் தரித்துச்செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## கோழிகளுக்கு நஞ்சுவைத்த வாலிபரும் நஞ்சுக்குப் பலி!

பண்டத்தரிப்பு, வெள்ளி

தமது மிளகாய்க்கன்றுகளைப் பக்கத்துவீட்டுக்காரரின் கோழிகள் அடிக்கடி வந்து அழிப்பதைப்பொறுக்கமுடியாத வாலிபர் ஒருவர் அக்கோழிகளுக்கு கிருமிநாசினியைச்சோற்றுடன் கலந்து வைத்தாராம். இதனால் பலகோழிகள் செத்துவிடவே பிரஸ்தாப வாலிபரை அவரது தாயாரும், பக்கத்துவீட்டுக்காரரான மாமனாரும் கண்டிக்கவே அதைப் பொறுத்துக் கொள்ளமுடியாத அந்த வாலிபர் கிருமிநாசினியைக் குடித்து தன்னுயிரை மாய்த்துக்கொண்டாராம்.

இவ்விபரங்கள் பண்டத்தரிப்பு பனிப்புலத்தைச் சேர்ந்த அப்புலிங்கம் யோகேந்திரன் என்னும் 23வயது வாலிபரின் மரணவிசாரணையின் போதுதெரியவந்துள்ளன.

கிருமிநாசினி குடித்த அவ்வாலிபர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் வழியில் மரணமானார். யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தியபோது இறந்தவரின் தாயார், சகோதரன் ஆகியோர் சாட்சியமளித்தனர். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்ட மரணவிசாரணை அதிகாரி தீர்ப்புவழங்குவதை ஒத்திவைத்தார். (இ)

## தமக்காக வாதாடியும் குற்றவாளிதான்

சாவகச்சேரி, வெள்ளி

சந்தையில் மீன்விலை கேட்டுக்கொண்டு நிற்கையில் எதிரி என்பின்னால் நின்று எனது ஷேர்ட் பொக்கட்டில் தன் கையைவிட்டு அதனுள்மடித்து வைத்திருந்த முன்னூறு ரூபாவை எடுத்தார் எடுத்தவுடன் காசை தன்னுடன் உதவிக்கு வந்த சிலருள் ஒருவரிடம்கொடுத்துவிட்டார். அவர் வாங்கிக்கொண்டு ஓட்டம் பிடித்தார். நான் எதிரியைக் கையோடு பிடித்து பொது மக்களின் துணையுடன் அப்போது சந்தையில் கடமையில் ஈடுபட்டிருந்த சாவகச்சேரி பொலிசாரிடம் கொடுத்தேன்''

கொடிகாமச் சந்தையில் நடைபெற்ற திருட்டு வழக்கில் வழக்காளியொருவர் மேற்கண்டவாறு சாட்சியம் சென்னார்.

வரணியைச்சேர்ந்த வி. ஆறுமுகத்தின் ஷேர்ட் பொக்கட்டில் இருந்து முன்னூறு ரூபாவைத் திருடியதாக வரணியைச் சேர்ந்த சி. தர்மலிங்கம் மீது தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்பவ தினத்தன்று கொடிகாமச்சந்தையில் கடமையில் நின்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் திரு. யூஸைார், திரு. பந்துலு ஆகியோர் இச்சந்தேகநபர்களைபொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்ததைத்தொடர்ந்து நடைபெற்ற வழக்கை சார்ஜன்ட் திரு. என். குகராசன் நடத்தினர். எதிரி சார்பில் சட்டத்தரணியின்றி அவர் தாமே வாதாடினார். எதிரிகுற்றவாளியாக காணப்பட்டார். தீர்ப்பு இம்மாதம் 22-ந்திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

......

## சொல்லமுடியாத பேரிழப்பு

யாழ்ப்பாணம், சனி

காலஞ்சென்ற தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் அரசியல் மேதையும் சட்டவல்லுனருமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக நேற்றுயாழ். இளைஞர் கழகம் அவசரமாகக்கூடி அனுதாபச்செய்தியை அனுப்பியது. இக்கூட்டத்தில் கழகத் தலைவர் திரு. சு. சி. சரவணபவான் திரு. இ. இரத்தின கோபால், செல்வி ஞானம்பிகை முதலானோர் இரங்கல் சொற்பொழிவாற்றினர்கள்.

தமிழர் ஒன்றுபட்டு ஒற்றுமையாகப் போராடும் வேளையில் அன்னாரின் மறைவு தமிழ் சமுதாயத்திற்கு சொல்லமுடியாத பேரிழப்பு என்றும், அன்னார் சட்டத்துறையில் இலங்கையிலும் தென்னகத்திலும் பிரகாசித்து விளங்கினர் என்றும் அவர் மந்திரியாக இருந்த காலத்தில் நிறுவிய தொழிற்சாலைகள் அன்னாரை என்றும் நினைவுபடுத்தும் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ)

**வின்ஸர்** (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
★ கமலஹாசன் ★ ஸ்ரீவித்யா
★ சுந்தரராஜன் ★ ஜெயசுதா ★ நாகேஷ்
நடித்த K. பாலசந்தரின்
**அபூர்வ ராகங்கள்**

**RIO** (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45
Aphrodite Goddess of Love

''அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் இறுதி யாத்திரையை முன்னிட்டு இன்று சினிமாக் காட்சிகள் எதுவும் காண்பிக்கப்படமாட்டாது

### மணிவாக்கு

உலக இன்பத்துக்குக் காரணம் பொருளையாதல் போலத் தருமத்துக்குக்காரணம் அருளேயாம். அருளெனினும், கருணையென்னும் இரக்கம் எனினும் பொருந்தும்.

—நாவலர் நீதிவாக்கியம்

ஈழநாடு

The EELANADU

## இரண்டெழுத்து

ஜி. ஜி. என்ற இரண்டு எழுத்துக்கள் ஈழத்துத் தமிழ்ப் பேசும் மக்கள் வாயிலும் நெஞ்சிலும் நிறைந்து நிற்கும் எழுத்துக்கள்.

தமிழ்ப்பேசும் மக்கள்மனதில் மட்டுமல்ல சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த இரண்டு எழுத்துக்களுக்கும் தனிமதிப்பும் மரியாதையும் உண்டு.

இந்த இரண்டு எழுத்துக்களுக்கும் பல பெருமைகளுள்ளன.

நாற்பத்தி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் துறையில் ஈடுபட்டது இந்த ஜி. ஜி. என்ற இரண்டு எழுத்து.

வெள்ளையராட்சியிலிருந்து இந்த நாடு விடுதலை பெறுவதற்கு இந்நாட்டு மக்கள் எடுத்த முயற்சியில் தமிழ் மக்களுக்குச் சமத்துவம் கிடைக்க மாட்டாதென்பதை அறிந்துகொண்ட இந்த இரண்டெழுத்து தமிழ் மக்களுக்குச் சமத்துவ உரிமை கிடைக்க வேண்டுமென்று வேட்கை கொண்டது. அதற்காக வாதாடியது.

1929-ம் ஆண்டில் இலங்கையின், அரசியல் அமைப்பில், சிறுபான்மை மக்களின் நிலைமையைப் புரட்சிகரமாக மாற்றக் கூடிய 'டொனமூர்கமிஷன்' சிபார்சுகளை, 'அவற்றை ஏற்ருல் அவை சிறுபான்மை மக்கள் மரணத்தை ஏற்பதற்குச் சமானம்' என்று முன்னெச்சரிக்கை செய்தவர் சேர். பொன். இராமநாதன்.

டொனமூர்க் கமிஷன் சிபார்சுகளை ஏற்கக்கூடாது என்று இந்த இரண்டெழுத்து ஜி. ஜி. கருத்து வேறுபாடு கொண்டிருந்த தமிழ்ப் பிரமுகர்கள் மத்தியில் வாதாடி அவர்களின் ஆதரவையும் பெற்றது.

ஆனலும் 1931-ல் டொனமூர் கமிஷன் சிபார்சுகள் அமுலுக்கு வந்தன. அவற்றின் படி புதிதாக நிறுவப்பட்ட அரசாங்க சபைக்கான தேர்தல் நடைபெற்ற பொழுது அதைப் பகிஷ்கரிக்கவேண்டு மென்ற யோசனை தெரிவிக்கப்பட்டபோது, "அரசாங்கசபையில் அங்கம் வகிக்காவிட்டால் சிறுபான்மையினர் இன்னும் கஷ்டப்பட நேரிடும். ஆதலால் தேர்தலைப் பகிஷ்கரிக்கலாகாது" என்று இந்த இரண்டு எழுத்து ஜி. ஜி. யோசனை கூறியது.

இந்தயோசனையை அன்று ஏற்கத்தவறியதன் விளைவை பின்னர் அடுத்த சிலவருடங்களில் தமிழ் மக்கள் உணர்ந்தனர்! அதன்பின் அதே இரண்டெழுத்தைத் தெரிவுசெய்து பயனையும் பெற்றனர்!

1939-ம் ஆண்டில் இலங்கை அரசைத் திருத்தி அமைப்பதற்காக ஆளுநர் கொண்டுவந்த சிபார்சுகள் மீது அரசாங்கசபையில் விவாதம் நடைபெற்ற போது சிறுபான்மைச் சமூகங்களின் சார்பில் பதினைகுமணிநேரம் முழக்கமிட்டதும் ஜி. ஜி. என்ற இரண்டு எழுத்துக்கள் தான்.

சேர்ல்பரிக் கமிஷன்முன் இந்தஇரண்டு எழுத்துக்களும் சிறுபான்மையினருக்காக வாதாடியது. அந்த நியாயத்தை சோல்பரிக்கமிஷன் அப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆண்டுகள் பல சென்ற பின்தான் சோல்பரிப்பிரபு தான் தவறு செய்துவிட்டதாக ஒப்புக்கொண்டார்.

இந்தப் 'பாவமன்னிப்பு' காலங்கடந்ததாலும் அந்த இரண்டெழுத்தின் தீர்க்கதரிசனத்தை இன்றும் எடுத்துச்சொல்லுகிறது.

சட்டத்துறையில் இந்த ஜி. ஜி. என்ற இரண்டெழுத்து சாதித்த சாதனைகள் ஈழத்தில் மட்டுமல்ல வெளிநாடுகளும் நன்கறியும்!

ஜி. ஜி. என்ற இரண்டெழுத்து அரசியலிலும்சட்டத்துறையிலும் காலடி எடுத்துவைத்த சிறிதுகாலத்திலேயே கொழும்பில் நடந்த ஒரு வைபவத்தில் பிரபல பத்திரிகையாசிரியரான இந்தியப் பிரமுகர் ஒருவர் இந்த இரண்டு எழுத்தை "ஈழத்தின் சத்தியமூர்த்தி" என்று வர்ணித்தார்.

அந்தநாளில் தமிழ்நாட்டில் மாபெரும் வழக்கறிஞராகவும் இந்திய விடுதலைப் போராட்ட வீரராகவும் சத்தியமூர்த்தி திகழ்ந்தார்.

இன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக விருந்த திராவிடமுன்னேற்றக் கழகத்தலைவர் கலைஞர் மு. கருணாநிதிக்கெதிராக இந்திய அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்கில் தோன்றி வாதாடச் சென்றதும் அதற்காகவே இறுதியில் தமதுமுழுச் சக்தியையும் பயன்படுத்த முனைந்ததும் ஜி. ஜி. என்ற இந்த இரண்டு எழுத்துத்தான்!

இதுவொன்றே போதும், இந்த இரண்டெழுத்தின் சட்ட நுணுக்கத்துக்கும் வாதத்திறமைக்கும்!

1962-ம் ஆண்டில் ஈழத்தில் நடைபெற்ற புரட்சிச் சதிவழக்கு விசாரணையில் இந்த இரண்டெழுத்து ஜி. ஜி. காட்டியதிறமையும் அதன நாவன்மையும் இலங்கைமக்கள் மட்டுமல்ல வெளிநாட்டவர்களும் மறக்கமுடியாத நிகழ்ச்சி.

இவையெல்லாவற்றையும் விட சமீபத்தில்தமிழர் கூட்டணிச்செயலாளர் நாயகத்தின்மீதும் மற்றும் மூன்று தமிழர் கூட்டணிப் பேரவைப் பிரதிநிதிகள்மீதும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாகத் துண்டுப்பிரசுரம் விநியோகித்ததாகக் குற்றஞ்சாட்டி ட்ரயல் அட்பார் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் அமரர் திருச்செல்வம் ஈழத்தமிழர் வரலாறு பற்றி வாதிட சட்ட நுணுக்கங்கள் பற்றி இந்த இரண்டெழுத்து ஜி. ஜி. வாதிட்டது. அதில் வெற்றியும் பெற்றது.

அதுமட்டுமல்ல இந்த இரண்டெழுத்து நடத்திய வாதத்தையும்எடுத்துக்காட்டியசட்ட நுணுக்கங்களையும் வைத்து நீதிமன்றம் அளித்த தீர்ப்பைத் தொடர்ந்தே அவசரகாலச் சட்ட பிரகடனத்தில் பின்னர் திருத்தம் செய்யப்பட்டது நாடறிந்ததே.

சட்டத்துறையில், அரசியலில், சமயத்துறையில் மற்றும் எல்லாத் துறையிலும் தொட்டதெல்லாம் பொன்னுக விளங்கிய ஜி. ஜி. என்ற அந்த இரண்டு எழுத்துக்கள் தான் மறைந்த தமிழர் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

அறிவும் ஆற்றலும் சேவை மனப்பான்மையும் கொண்ட அவரின் ஆத்மா சாந்தியடைக!

அவர் ஈழத்துக்கு வழி காட்டிய ஒளி! அதைப் பின்பற்றிச் செல்லவேண்டியது மற்றையோர் கடமை!

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டுபெப்ரவரி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanadu P. O Box 49, Jaffna Telegram: Eelanadu Telephone 389 Registered as a Newspeper in Srilanka.

# சட்டமேதை மட்டுமல்ல சிறந்த கருமவீரரும் ஜி ஜி

(புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை)

தமிழ்க்காங்கிரஸ் ஸ்தாபன காலம் தொட்டு ஜி. ஜி.யும் நானும் இணைபிரியாத நண்பர்களாய் இருந்தோம். அவர் உலகப் பிரசித்திபெற்ற ஒரு சட்ட மேதையாய் இருந்தது மன்றி சிறந்த கரும வீரராகவும் திகழ்ந்து இந்த 20 ம் நூற்றுண்டில் நிலைநாட்டிய சாதனைகள் மிகப்பல.

இரண்டு நடையில் அவர் பேசுவார். ஒன்று கம்பீர நடை. மற்றது அன்பர்கள் இடத்தில் பேசும் பணிவுள்ள நடை. முதலாவது (சிட்னி சொய்ஸா) சதி வழக்கின் போது நான் அவரைச் சந்தித்து வழக்கின் நிலை என்ன என்று கேட்டேன். அவர் சற்றும் தயங்காமல் 'வழக்கைத் தூக்கி எறிந்துவிடுவேன்' என்ருர். பிரிவிகவுன் ஸிலுக்குச் சென்று தமது சொல்லை நிலைநாட்டினர்.

76-ம் ஆண்டு யூலை மாதம் 31 ம் திகதி மாலை 6 மணிக்கு கொழும்பில் அன்னாரது இல்லத்தில் அவரைப் பார்க்கப் போயிருந்தேன். அப்போது அமிர்தலிங்கம் சம்பந்தப்பட்ட (டிரயல் அட்பார்) விசாரணை நடக்க இருந்தது. வழக்கின் நிலை என்ன என்று நட்புரிமையால் வினவினேன. அதே முந்திய வழக்கில் பேசிய அதே பாஷையில் "வழக்கைத் தூக்கி எறிந்து விடுவேன்" என்று கூறினர்.

மட்டக்களப்பில் நடந்த சிறைச்சாலை கொலைவழக்கில் ஜி. ஜி. வந்திருந்தது எனக்கு முன்னமே தெரியாது. அன்று காலை 10 மணியளவில் மட்டக்களப்பு நீதிமன்றத்தைச் சுற்றி கூடியிருந்த சனசமுத்திரத்தைக் கண்டு இதென்ன இவ்வளவு சனக்கூட்டமென்று விசாரித்தேன். 'இன்று சிறைச்சாலை கொலை வழக்கு விசாரணை ஜி. ஜி. வந்திருக்கிருர்' என் சொன்னுர்கள். வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான மக்கள் ஜி. ஜியை ஒருதரம் எங்கள் கண்ணுரப் பார்க்கவேண்டும் அது முடியாமல் இருக்கிறதே' என்று மிகவும் அங்கலாய்த்தார்கள். இந்த நிலையில் 11 ம்ணிக்கு நீதிமன்றம் தேநீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது.

ஜி. ஜி. முதலிய எல்லாரும் மட்டக்களப்பு வாடிவீட்டுக்குச் சென்றுவிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் சட்ட அறிஞர்கள் தங்கும் அறையில் அமர்ந்தேன். 15 நிமிடம் கழித்து ஜி. ஜி. முதல் எல்லாரும் அங்கே திரும்பிவந்தனர். ஜி. ஜி. என்னைக் கட்டித்தழுவிக்கொண்டார். கொழும்பிலிருந்து வந்த நியாயவாதிகளுக்கு என்னை அறிமுகம் செய்துவிட்டு பேசிக்கொண்டிருக்கையில், நான் ஜி. ஜி.யைப் பார்த்து 'இந்த ஜன்னல் வாயிலில் வந்து நில்லுங்கள்' என்று சொன்னேன். ஏனென்று கேட்டார். ஆயிரக்கணக்கான மக்கள் தங்களை ஒருதரம் கண்ணுல் பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள்' என்றேன். "நீங்களும் வந்து என்னேடு நில்லுங்கள்" என்ருர். இருவரும் போய் நின்ருேம். சன சமுத்திரத்தின் ஆனந்த ஆரவார அலைகளுக்கு உள்ளே ஜி. ஜி. நிமிர்ந்து நின்ற காட்சியை என்னுல் மறக்க முடியவில்லை.

பின்னர் இருவரும் பேசிக்கொண்டிருந்தபோது நான் சொன்னேன். "மலையை விழுங்கிய மகாதேவனுக்கு கதவு ஒரு பப்படம்" என்றேன். அவருக்கு உடனே விளங்கவில்லை. ஸிட்னி சொய்ஸா சதிவழக்கை தூக்கி எறிந்த உங்களுக்கு இதுவும் ஒரு வழக்கா" என்றேன். நகைச்சுவை ததும்ப. கோர்டுகூடியது. விசாரணை தொடர்ந்தது. ஜி. ஜி. வெற்றி வீரராகக் கொழும்பு திரும்பினுர்.

கடைசியாக நான் அவரைக் கண்டபோது அவர் உடல் மெலிந்திருந்தது. குரல் தளர்ந்திருந்தது. வழக்கமாக நேருக்குநேர் என்னுடன் பேசுகிறவர், அன்று பக்கத்தில் இருந்து கொண்டு சொன்னுர், "இந்த நேரத்தில் என்ன குடித்தால் உங்கள் உடம்புக்கு பொருத்தமாக இருக்கும்?" என்று கேட்டார். அவ்வளவு என் உடம்பில் கவனமாக இருந்த அவரது உடல் இன்று வீழ்ந்துவிட்டது!

மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஒரு நாள் இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஒரு வழக்கு நடக்கிறது. எதிரி ஒரு சுவாமியார். முறைப்பாட்டுக்காரரும் சாட்சிகளும் ஒரே மாதிரி தங்களுடைய வாக்கு மூலங்களை கோட்டில் சொல்லியதால் வழக்கு பூரணமாக நிரூபிக்கப்பட்டதுபோல எங்களுக்குத் தோன்றியது. மணிக்கணக்கில் சிங்கம்போல் கர்ச்சித்த ஜி. ஜி. குரலை மாற்றிக்கொண்டு, எதிரிக்காக பரிந்து பேசிய உருக்கமான காட்சி இன்றும் என் மனத்தில் பிரதிபலித்தக்கொண்டிருக்கிறது.

"இந்த எதிரி ஒரு மகன். இவர் இலங்கைப் பல்கலைக் கழகம், இராமகிருஷ்ண மிஷன், விவேகானந்தசபை போன்ற தாபனங்களில், அறிஞர்களின் தலைமையில் விரிவுரைகள் நிகழ்த்திய ஒரு பெருமகன். இதோ எழுத்து மூலமான அத்தாட்சிகள். இனி வழக்காளி பக்கத்தைப் பார்ப்போம். இந்த முறைப்பாட்டுக்காரரும் சாட்சிகளும் ஏமாற்றிப் பிழைக்கின்ற நம்பிக்கையில்லாப் பேர்வழிகள் இதோ எழுத்துமூலமான அத்தாட்சிகள். இந்த மகானை இந்த ஏமாற்றுக்காரனின் சாட்சியைக்கொண்டு சிறைக்கு அனுப்புவது நீதியுமல்ல, தருமமுமல்ல. இதுதான் நடந்தது. சுவாமிமீது பொருமை கொண்ட இவர்கள், ஓரிடத்தில் அந்தரங்கமாகக் கூடி, எழுதி பாடமாக்கி சதி செய்து இங்கு வந்திருக்கிருர்கள். இது முழுதும் மெய்யாக இருக்க வேண்டும், அல்லது முழுதும் பொய்யாக இருக்கவேண்டும். இது முழுதும் பொய் என்பதை இவர்களைக்கொண்டே நான் நிரூபித்துவிட்டேன்" என்று கூறி முடித்து அமர்ந்தார். இவ்வளவுக்கும் அவரையே பார்த்துக்கொண்டிருந்த நீதிபதியவர்கள் எதிரியை விடுதலை செய்தார். அந்தக் காட்சி இன்னும் என் கண் முன்னே நிற்கின்றது.

ஒரு மகாமேதை. அஞ்சா நெஞ்சன், திடபுத்திவாய்ந்த தீரன், சமயோசிதபுத்தி படைத்த ஒரு தீர்க்கமான பெருமகன். இருபதாம் நூற்றுண்டில் எஸ். ஏ. பி. சந்திரசேகராவுக்குப் பின் சட்ட உலகில் பெரும்புகழ் நாட்டிய தன்னிகரில்லாத் தலைவர் நம்மைவிட்டுப் பிரிந்தது நமக்குமட்டுமல்ல, உலகம் முழுதக்குமே ஒரு பேரிழப்பாகும். அவரது குண இயல்புகளில் நன்குகக் கூடிப் பழகிய அன்பும் நட்பும் காரணமாக எனது மனம் நிறைந்த கவலையை இதன் மூலம் நான் வெளியிட்டு ஆறுதல் அடைகிறேன். அன்னுரின் ஆன்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

# தமிழ்த் தலைவர்கள் வழக்கு வாபஸ்!

கொழும்பு; வெள்ளி தமிழ்த் தலைவர்கள் மீதான 'ட்ரயல் அட்பார்' வழக்கு இன்று வாபஸ் பெறப்பட்டது.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் உள்ள மேல் நீதிமன்ற வளவில் இன்று கூடிய 'ட்ரயல் அட்பார்' நீதிமன்றத்தில் தமிழ் தலைவர்கள் மீதான அவசரகாலச்சட்டமீறல் குற்றச்சாட்டு வாபஸ் பெறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வழக்கின் பிரதிவாதிகளான திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், கே. துரைரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகிய நால்வரும் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். (இ)

## மார்ச் 1-ல் எழுதுவினைஞர் நியமனம்

கொழும்பு, வெள்ளி எழுதுவினைஞர் சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொதுநிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய பதவியுயர்வு பெறும் சிற்றூழியர்கள் எழுதுவினைஞர்களாக நியமிக்கப்படவிருக்கின்றனர்.